பக்கங்கள்: பத்து

gistered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

ங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | பங்குனி 22 ஞாயிற்றுக்கிழமை | (04-04-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 107

துரித தபால்.பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

## ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான

# ஐ.ம.சு.முன்னணி

# ஆட்சி அமைக்கும்!



## கதிர்காமருக்குப் பிரதமர் பதவி?



(கொழும்பு)

**நடந்துமுடிந்த 13ஆவது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் முடிவுகள் இன்னமும் முழுமையாக அறிவிக்கப்படாத போதிலும், ஆட்சியமைக்கும் பெரும்பான்மைப் பலத்தை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. இணைந்த ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியே பெற்றுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்துக் கூறியுள்ளனர்.**

நேற்று முன்தினம் நடந்து முடிந்த 13ஆவது பாராளுமன்ற தேர்தல் முடிவுகளில் நேற்றுவரை 10 மாவட்டங்களின் தேர்தல் முடிவுகளே உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது இன்னமும் 12 மாவட்டங்களின் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படவேண்டியதாக இருந்தபோதிலும் வாக்குகள் எண்ணப்பட்டதன் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 108 ஆசனங்களும் ஐக்கியதேசியக் கட்சிக்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பின் ஆதரவை நாடி

## ஐக்கிய தேசிய முன்னணியின் விசேட குழு வன்னி வருகை!

(கொழும்பு)

நடைபெற்று முடிந்துள்ள 13ஆவது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் முடிவுகளின் படி தமிழ் கூட டமைப்புப் பெற்றுள்ள அமோக வெற றியை அடுத்து, ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் அடங்கிய விசேட குழுவொன்று வன்னிக்கு விஜயம் மேற கொள்ளவுள்ளதாக நம்பக மான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

நடந்துமுடிந்த தேர்தலில் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு சுமார் 90 ஆசனங்களைப் பெறுமென்றும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மாவட்டத்தில் மகேஸ்வரனுக்கு வெற்றி

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நடைபெற்று முடிந்த தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் 4 இடங்களை கூட்டமைப்பு வென்றது

வன்னித் தேர்தல் தொகுதியில தமிழர் கூட்டமைப்புக்கு 4ஆசனங்கள் கிடைத்துள்ளன. மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய இத் தொகுதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஆசனங்கள் 6ஆகும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 8 ஆசனங்களைக் கைப்பற்றியது

## ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு ஒரு ஆசனம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் நடந்த இலங்கையின் பதின்மூன்றாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 8 ஆசனங்களைக் கைப்பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டியுள்ளது. மீதியாக வுள்ள ஒரு ஆசனத்தை ஈ.பி.டி.பி. கைப்பற்றியுள்ளது.

இம்முறை பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்திலிருந்து மாவை சேனாதிராசா தலைமையிலான தமிழரசுக்கட்சி, டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உள்ளிட்ட 8 அரசியல் கட்சிகளும் தமிழர் விடுதலைக கூட்டணியின் தலைவர் வ.ஆனந்த சங்கரி தலைமையிலான சுயேச்சைக் குழு - I உள்ளிட்ட இரு சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டன.

இவற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நேரடியான ஆதரவுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சி (தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு) போட்டியிட்டது.

இந்த நிலையில் தமிழரசுக் கட்சி ஈட்டியிருக்கின்ற இந்த அமோக வெற்றியானது, தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இருக்கின்ற மாபெரும் மக்கள் ஆதரவை பறைசாற்றுவதாக அமைகின்றது என அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)



# தமிழ்க் கூட்டமைப்பை வெற்றிபெற வைத்த வாக்காளர்களுக்கு புலிகள் நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)


நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்து தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்திய வாக்காளர்கள் அனைவரையும் தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பிலும், எமது தலைமைத்துவத்தின் சார்பிலும் மனம்நிறைந்து பாராட்டுகிறோம், நன்றி தெரிவிக்கின்றோம். இது ஒரு வரலாறு காணாத தமிழ் மக்களது அரசியல் பங்களிப்பாகவும், விடுதலைப் போராட்டத்தின் புதிய வடிவமாகவும் விளங்குகின்றது.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல்துறை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களை மென்மேலும் தமிழ்மக்களது விடுதலைப் பாதையில் அர்ப்பணிப்புடன் மக்களுக்குச் சேவையாற்றவும், தமிழ்த் தேசியத்தின் விடுதலைப் பயணத்தில் முன்னேறவும் இவ் அரசியல் பங்களிப்பு ஊக்குவித்துள்ளது. இதுவே மக்களது எதிர்பார்ப்புமாகும். அத்துடன், இன்றைய வரலாற்றுக் கட்டத்தின் முக்கியத்துவத்தையும் இப்பங்களிப்பு பெறுகின்றது.


தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாமும், எமது தலைமைத்துவமும் தமிழ்மக்களின் ஒரு புதிய உறுதிப்பாட்டுடன் உழைத்து எமது இலட்சியத்தை அடைவோம் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

எமது தேசியத்தினையும், தாயகத்தின்மீதான பற்றுதலையும் எமக்குள்ள சுயநிர்ணய உரிமையையும் நாம் அனைத்து உலகத்திற்கும் மீளவும் வலுவுடன் பறைசாற்றுவதற்கான சாதகமான வாய்ப்பினையும் தமிழ்மக்கள் உருவாக்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



# ஒரு இலட்சம் விருப்பு வாக்குகளை பெற்று கஜேந்திரன் முதலிடத்தைப் பிடித்தார்

## 2வது இடம் பத்மினி சிதம்பரநாதனுக்கு



நடந்து முடிந்த பொதுத்தேர்தல் முடிவுகளின்படி யாழ்.மாவட்டத்தில் என்றுமில்லாதவாறு அதிகப்படியான விருப்புவாக்குகளை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் செல்வராசா கஜேந்திரன் பெற்றுள்ளார். இவர் ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 77 விருப்புவாக்குகளைப் பெற்றுள்ளார்.

இவருக்கு அடுத்தபடியாக, இதே கட்சியில் போட்டியிட்டவரான பெண் வேட்பாளர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் 68 ஆயிரத்து 239 விருப்பு வாக்குகளையும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 60 ஆயிரத்து 768 விருப்பு வாக்குகளையும் பெற்றுள்ளனர்.



இதேவேளை, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்பவற்றின் முன்னாள் தலைவரான செ. கஜேந்திரன், தமிழீழ விடுதலைப் போரையும் தமிழர்களின் உணர்வலைகளையும் உலகறியச் செய்த பொங்கு தமிழ் நிகழ்வை யாழ். பல்கலைக் கழகத்தில் நடத்த முன்னின்று பெரும் பங்காற்றி உழைத்தவர் என்பதும், அரசின் அடக்கு முறைகளுக்கு எதிராக இடம்பெற்ற மாணவர் போராட்டங்களை மிகச் சிறப்பாக வழி நடத்தியவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

## தேசிய ரீதியில் கட்சிகள் பெற்ற வாக்குகள்

| அரசியல் கட்சிகள் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி | 3,966,962 | 47.2% |
| ஐக்கிய தேசியக் கட்சி | 3,185,679 | 37.9% |
| ஜாதிக ஹெல உறுமய | 533,852 | 6.3% |
| இலங்கைத் தமிழரசுக் கட்சி | 497,758 | 5.9% |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 127,524 | 1.5% |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 22,060 | 0.3% |
| ஜாதிய சங்வர்த்தன பெரமுன | 14,111 | 0.2% |
| ஐக்கிய சோசலிசக் கட்சி | 12,802 | 0.2% |
| மலையக மக்கள் முன்னணி | 8,165 | 0.1% |
| புதிய இடதுசாரி முன்னணி | 8,061 | 0.1% |
| ஐக்கிய லலித் முன்னணி | 3,636 | 0.0% |
| இலங்கை ஜனநாயக ஐக்கிய முன்னணி | 3,405 | 0.0% |
| ஐக்கிய முஸ்லிம் மக்கள் முன்னணி | 3,307 | 0.0% |
| தேசிய மக்கள் கட்சி | 1,540 | 0.0% |
| சிங்கள மகாசம்பந்த பூமிபுத்திர கட்சி | 1,204 | 0.0% |
| ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி | 1,114 | 0.0% |
| சுவராஜ்ய | 1,105 | 0.0% |
| எஸ்.எல்.பி.எப். | 591 | 0.0% |
| றுகுணு ஜனதாக் கட்சி | 498 | 0.0% |
| இலங்கைத் தேசிய முன்னணி | 456 | 0.0% |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி | 369 | 0.0% |
| ஜனநாயகக் கட்சி | 354 | 0.0% |



நிட்டம்புவவில் ஜனாதிபதியும், கொழும்பில் பிரதமரும் நேற்று முன்தினம் வாக்களிப்பில் கலந்துகொண்டபோது...

## பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொள்ள

# கரிகாலன், கௌசல்யன் சுவிற்சர்லாந்து பயணம்

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களான கரிகாலன், கௌசல்யன், உட்பட மூவர்கொண்ட குழு நேற்றுமுன்தினம் சுவிற்சர்லாந்து பயணமானதாக கொழும்பில் உள்ள அந்நாட்டுத் தூதுவர் பெர்னாட்டினோ ரீகாகோனி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த மூன்று பேர் அடங்கிய குழு சுவிற்சர்லாந்து செல்வதற்கு அனுமதி கேட்டதாகவும், அதன்படி இவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார். இவர்கள் சுவிற்சர்லாந்தில் பங்குபற்றவுள்ள நிகழ்வுகள் குறித்து தனக்கு எதுவும் தெரியாதெனவும் தெரிவித்தார்.

இவர்கள் சுவிற்சர்லாந்தில் மேற்கொள்ளவுள்ள எந்த நடவடிக்கையாக இருந்தாலும், அது அந்நாட்டின் சட்டதிட்டத்திற்கு அமைந்ததாகவே இருக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.


விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மூத்த உறுப்பினர் கரிகாலன், அவரது மனைவி எழுமதி கரிகாலன் ஆகியோர் சுவிற்சர்லாந்தில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக சுவிற்சர்லாந்து சென்றுள்ளதாக புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த)



# இறைவன் எமக்கு அளித்த வரங்கள்

# மற்றவர்களுக்கு அர்ப்பணம் செய்வதற்கே

வாழ்ககையில் எல்லாப பொருட்
களையும் வைத்துக்கொள்ளவேண்
டும, அடைந்துவிட வேண்டும் என்று
ஏங்கித் தவிப்போர் ஏராளம் பேர்.
எமது அந்த ஏக்கத்திலும் தவிப்
பிலும் எதை அடைய முயற்சிக்
கிறோம் எதை தேடுகிறோம் என்ற



தெளிவுகூட சிலவேளைகளில்
எமக்கு இல்லாமல் போய்விடுவ
துண்டு.

எல்லாப் பொருட்களையும் நிறை
வாக வைத்திருக்க வேண்டும் என்று
ஏங்கித் தவித்த மனிதன் ஒருவன்
ஓர் அழகிய காலணி ஒன்றை
வாங்க விரும்பினானாம். தனக்கு
விருப்பமான, தான் திட்டமிட்டுத்
தேடித் திரிந்த காலணி தனக்கு
கிடைக்கவில்லை என்ற ஏகக
த்தில் அவன் அங்கலாய்த்துக்
கொண்டிருந்த போது வீதி வழியே
ஒரு மனிதனைச் சந்தித்தான். ஒரு
கையில் கோலை ஊன்றியவனாக ஒரு
காலே இலலாமல் வந்த அந்த
மனிதனைப் பார்த்தபோது அவன்
ஆடிப்போய் விட்டான். நல்ல
காலணி, எனக்கு விருப்பமான
காலணி, நான் விரும்புகின்ற
காலணி எனக்குக் கிடைக்க
வில்லையே என்று அங்கலாய்த
துக்கொண்ட அந்த மனிதன்,காலே
இல்லாத மனிதனைப் பார்தத
போது தன் வாழ்வின் அடிப்
படைகளையே மாற்றிக் கொண்
டான்.

## தேடலுக்குரிய இலட்சியம் எது?

மனித வாழ்வு முழுவதும் ஒரு
தேடலாக இருக்கிறது. அத்தேடல்
உண்மையில் மனிதத்தை அடை
வதற்கான தேடலாக இறைவ
னைச் சநதிப்பதற்கான தேடலாக
எப்போதும் இருக்க வேண்டும்.
இத்தேடல் ஒரு நிலையில் நிறைவு
பெறுகின்ற ஒரு தேடல் அல்ல.
அது ஒரு முடிவுற்ற தேடல். இன்
னும் முழுமையையும் நிறைவை
யும் நோக்கி நகர்ந்து கொண்டி
ருக்கின்ற ஒரு தேடல். ஒருவன்
கடவுளைத் தேடி எல்லா இடமும்
அலைந்து அவரைக் கண்டு பிடித்து
விட்டான் என்றால் அந்தக் கண்டு
பிடிப்பு அவனுடைய தேடலின்
முழுமை அல்ல. உண்மையில்
அது ஒரு ஆரம்பம் தான். இறை
வனுக்கான தேடல்-மனிதத்திற்
கான தேடல்- அது ஒரு முடி
வேயற்ற தேடல். என்றும் நிறைவை

## பரமபிதா காட்டிய பாதை

நோக்கி நகர்ந்துகொண்டிருக்கும்
தேடல்.

எமது வாழ்வின தேடல்கள்
பலவிதமானவையாக இருக்கின்றன.
அவை எப்போதும் உலகத்தை,
உலகப் பொருட்களை, பணத்
தை, பதவியை, புகழை, பெரு
மையை என உலகத்தை நாடிய
வையாகவே அமைந்துவிடுகின்றன.
ஒரு அமாவாசை இரவில ஓர்
இருட்டறையில் அங்கே இல்லாத
ஒரு கறுத்தப் பூனையைத் தேடிக
கொண்டிருபபதைப் போல் எமது
தேவைகள் அனேக வேளைகளில்
அமைந்துவிடுவதுதான மனித வாழ்
வின் நிலையாக இருக்கிறது.
பொருட்களையும் பெயரையும்
பணத்தையும் பதவியையும தேடிக்
கொண்டிருக்கின்ற வேளையில
எம்மிடம் இருப்பவற்றை பார்க்கவும்
அவற்றைப் பயன்படுத்தவும்
அவற்றை மற்றவர்களுக்கு கொடுக்
கவும் நாம் முயல்வதில்லை.

## கொடுப்பதில்தான் இன்பம் இருக்கிறது

எம்மிடம் என்ன திறமை இருக்
கிறது, எம்மிடம் என்ன வளம் இருக்
கிறது, எம்மிடம் என்ன இறைவ
னின் கொடை நிறைந்திருக்கிறது
எனபதைக் கண்டுபிடிக்காத போதும்-
உணராத போதும் அதை நாம
மற்றவாகளுக்குக் கொடுக்க முடியாது.
மற்றவர்களுக்குக் கொடுக்க
வேண்டும் என்றொரு உயர்ந்த
நல்ல பண்பு உருவாகிவிட்டால்
கொடுப்பது ஒரு மகிழ்வான அனு
பவமாகவும் இனிமையான பணி
யாகவும் மாறிவிடும். நாம் கொடுக்கக்
கொடுக்க இறைவன் பல மடங்கு
எமக்கு கொடுத்துக் கொண்டே
இருப்பார். கொடுக்கிற தெய்வம்
கூரையைப் பிய்த்துக்கொண்டு
கொடுக்குமாம் என்ற அனுப
வத்தை நாம் நிறைவாக மற்றவர்
களுக்கு கொடுக்கும் போதே உணர
முடியும்.

ஒருதடவை இயேசுவிடம் சட்ட
வல்லுனன் ஒருவன் வந்து முடி
வில்லாத வாழ்வைப் பெற என்ன
செய்ய வேணடும் எனறொரு கேள்
விக்கணையைத் தொடுத்தான். இயேசு
வும் அவனுக்கு நிறைய விடயங்
களை அடுக்கடுக்காய் சொல்லிக்
கொண்டே போனார். விபச்சாரம் செய்
யாதே, கொலை செய்யாதே,களவு
செய்யாதே, பொய்ச்சான்று சொல்
லாதே, உன் தாய் தந்தையை
மதித்து நட எனப் பல விடயங்
களை அவன் கடைப்பிடிக்க வேண்
டுமென அவர் தெரிவித்தார். அவனோ
இவையனைத்தையும் என் இள
மையிலிருநது கடைப்பிடித்து
வருகிறேன் என்றான். இதைக்
கேட்ட இயேசு அவரிடம், உமக்கு
இன்னும் ஒன்று குறைவு படுகிறது.
உமக்குள்ள யாவற்றையும் விற்று
எழைகளுக்குக் கொடும். அப்போ
விண்ணகத்தில் நீர் செல்வராய்
இருப்பீர் பின்பு வந்து என்னை
பின்பற்றும் என்றார். இதைக் கேட்ட
அவன் மிகவும் வருத்தமுற்றான்.
ஏனெனில் அவனிடம் ஏராளமான
சொத்து இருந்தது. நிறைய வைத்
திருப்பவாகளுக்குக் கொடுக்க
மனம் வருவதில்லை. கொடுக்க
விரும்புகிறவர்களுக்கு நிறைய
இருப்பதில்லை என்பது எப்போதும்
மனித வாழ்க்கையின் ஓர் நிலை
யாக இருப்பதை நாம் காண்
கின்றோம்.

## இறைவன் எமக்களித்ததை நாம் பிறருக்கு அளிப்போம்.

இறைவன் நம்மைப் படைத்தார்.
பல திறமைகளைக் கொடுத்தார்.
பல வரங்களைப் பொழிந்தார். பல
நற்குணங்களைத் தந்தார். இவற்

அருள் றூபன்
மரியாம் பிள்ளை

றையெல்லாம் நாம் வளர்க்கவும்
பயன்படுத்தவும் மற்றவர்களுக்
கான பணிக்காக அர்ப்பணம்
செய்யவும் வேண்டும். அப்போது
தான் நாம் பெற்றுக்கொண்டதை
மற்றவர்களுக்கு நிறைவாகக்
கொடுததோம் என்ற மன நிலை
யைப் பெறுவோம்.

இறைவன் கைமாறு கருதாது,
பிரதியுபகாரம் பாராது, திரும்பப்
பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற
நோக்கம் கொள்ளாது தம் அள
வற்ற அன்பினால் எம்மைப் படைத
தார். எமக்கு வசதிகளையும், வாய்ப்
புக்களையும் பல வரங்களையும்
தந்தார். அவற்றை நாம் முழுமை
யாகப் பயன்படுத்தவும் மற்றவர்க
ளுக்காக அர்ப்பணிக்கவும் வேண்
டும். எமது வாழ்வில் யாராவது
ஒருவர் கைமாறு கருதாது அள்ளி
அளளித்தருகிறார் என்றால் அவர்
மேல் எமக்கு அடிப்படையில் ஒரு
அன்புறவு உருவாகும். அவர் மட்
டில் ஒரு பரிவும் பக்தியும் பாச
மும் உருவாகும்.

இறைவன் எமக்குப் பொழிந்த
அனைத்து வரங்களையும் நினைத்
துப் பாாக்கின்ற போது நாம் எதை
அவருக்கு அன்பளிப்பாயக் கொடுக்க
முடியும் எதை நான் தருவேன்
இறைவா, உம் இதயத்தின் அன்
பிற்கு ஈடாக எதை நான் தரு
வேன் இறைவா என்று இறைவ
னின் அன்பையும் அளப்பெரிய
கருணையையும் நினைத்து நாம்
எப்போதும் பாடிக்கொண்டே இருப்
போம். □

## பயிற்சிக் கருத்தரங்கும் கலந்துரையாடலும்

(பருத்தித்துறை)

உலக உணவு விவசாய ஸ்தாப
னத்தின் அனுசரணையுடன், கன்று
வளர்ப்புத் தொடர் பான செயன்
முறை விளக்கங் களுடனான பயிற்
சிக் கருத்தரங கொன்று இன்று
ஞாயிற்று கிழமை பருததித்துறை
கால் நடை வைத்திய அதிகாரி
வைத் திய கலாநிதி எஸ். வசீகரன்
தலைமையில் புலோலி மெ.மி.
த.க. பாடசாலையில் நடைபெற
வுள்ளது.

அத்துடன், 2004 ஆம் ஆண்
டிற்கான கால் நடை அபிவிருத்
தித் திட்டங்களுக்கான பயனா
ளிகள் தெரிவு தொடர்பான கலந்
துரையாடலும் அங்கு இடம்பெற
வுள்ளது. வடமராட்சி வடக்கு வட
மராட்சி கிழக்கு பிரதேச செயலர்
பிரிவு களில் கறவைப் பசுவ
ளர்க்கும் பண்ணையாளர்களை
இதில் தவறாது கலந்து கொள்
ளுமாறு அறிவிக்கப்பட்
டுள்ளது. (உ-52)

# ரவீந்திரநாத் தாகூரின் பொக்கிஷங்கள்

# திருட்டுக் குறித்து பிரதமர் அதிர்ச்சி

(சென்னை)

கல்கத்தா சாந்தி நிகேதனி
லுள்ள விஷ்வபாரதி பல்கலைக்
கழகத்தில் ரவீந்திரநாத் தாகூரின்
விலை மதிப்பற்ற பொக்கிஷங்கள்
திருட்டுப் போயிருப்பது வருத்தமும்
கவலையும் அளிக்கிறது என்று பிர
தமர் அடல் பிஹாரி வாஜ்பாய் கூறி
னார்.

கடந்த மாதம் 25 ஆம் திகதி
திருட்டு நடந்த பல்கலைகழகத்
துக்கு அதன் வேந்தர் பொறுப்
பையும் வகிக்கும் பிரதமர் நேற்று
முன்தினம் நேரில் சென்றார்.

திருட்டு நடந்த அருங்காட்சியக
த்தை அவர் பார்வையிட்டார்.

பல்கலைக்கழகத் துணைவேந்
தர், மற்றும் அதிகாரிகளுடன்
ஆலோனை நடத்திய பின் செய்தி
யாளர்களிடம் பிரதமர் பேசினார்.

இந்தச் சம்பவம் குறித்துத் துரி
தமாகப் புலனாய்வு செய்து திருட்
டுப் போன பொக்கிஷங்களைக்
கண்டுபிடிக்கும்படி சி.பி.ஐ.க்கு
உத்தரவிட்டிருப்பதாக அவர் தெரி
வித்தார்.

இது சாதாரண குற்றம் அல்ல;
நாட்டின் கௌரவப் பிரச்சினை என்று
கூறிய பிரதமர்,இது மத்திய மாநில
அரசுகளின் பிரச்சினையும் அல்ல
என்று குறிப்பிட்டார்.

முன்னதாக, பல்கலைக்கழகம்
வந்த பிரதமருடன் மாநில ஆளு
நரும் மததிய அமைச்சர்கள் மம்தா
பானர்ஜி, மேற்குவங்க அமைச்சர்
ஆகியோரும் சென்றார்கள். (து)

# வேட்பாளர்களது சொத்து விபரங்கள்

# வேட்புமனுவுடன் சமர்ப்பிக்கபட வேண்டும்

(காஞ்சிபுரம்)

மக்களவைத் தேர்தலில் போட்டி
யிடும் வேட்பாளர்கள் தங்கள் சொத
துக் கணக்கு, கடன்கள், நீதி மன்
றத்தில் நிலுவையிலுள்ள வழக்கு
கள உள்ளிட்ட விபரங்களை வேட்பு
மனுத்தாக்கலின் போது அளிக்க
வேண்டும் என்று தேர்தல் ஆணை
யர் பி.வி.டாண்டன் கூறியிருக்கி
றார்.

காஞ்சிபுரத்தில் வேட்பாளர்
பட்டியல் குறித்த இணையத் தளத்
தைத் துவக்கி வைத்தபின்னர்
செய்தியாளர்களிடம் பேசும் போது
இதனைத் தெரிவித்தார்.

வேடபாளர்கள் குறித்த அனைத்
துத் வசாதனங்கள் மூலம் வெளி
யிடப்படு மென்றும் அவர் தெரி
வித்தார்.

தேர்தல் வரலாற்றில் முதன்
முறையாக வேட்பாளர்கள் பற்றிய
விபரங்கள் தற்போது வெளியிடப்
படவுள்ளதாக டாண்டன் கூறினாா.

தமிழ் நாட்டில் ஒவ்வொரு நாடாளு
மன்றத் தொகுதிக்கும் மூன்று மத்
திய பார்வையாளர்கள் பணியில்
ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும்,
அவர்களில் ஒருவர் கணக்குகளை
கண்காணிப்பார் என்றும், தேர்தல்
ஆணையர் மேலும் தெரிவித்தார்.
(து)

## இந்தியச் செய்திகள்

# தேர்தல் பிரசாரத்தில் கண்ணியம்

# கடைப்பிடிக்குமாறு வெ.நாயுடு

# வேண்டுகோள்

(சென்னை)

தேர்தல் பிசாரத்தில் கண்ணியத்
தைக் கடைப்பிடிக்க வேண்டு
மென்று பா.ஜ.க தலைவர் வெங்
கைய நாயுடு கேட்டுக் கொண்டிருக
கிறார்.

பெங்களூரில், நேற்று முன்தினம்
செய்தியாளர்களுக்குப் பதிலளிக்
கும் போது இதைத் தெரிவித்த
அவர், தமது கட்சிக்கும் இந்த
வேண்டுகோள் பொருந்தக் கூடியது
என்றார்.

காங்கிரஸ் கட்சியும் தனிப்பட்ட
அவதூறுகளைத் தவிர்க்க வேண்டு
மெனக் கூறிய அவர், வெளிநாட்
[illegible]
கலாமா என்ற விவாதத்துக்கு காங்
கிரஸ்கட்சி பின்வாங்குவது ஏன்
என்று கேட்டார்.

தமிழ் நாட்டில் பா.ஜ.க-அ.இ.அ.
தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு இல்
லாதது போல் கருத்துக் கணிப்புக்
கள் வெளியிடப்படுவது பற்றிக்
கேட்ட போது, இதற்கு முன்னரும்
இவைபோன்ற கருத்துக் கணிப்பு
கள் வெளியிடப்பட்ட போதிலும்
அவற்றையெல்லாம். முதலமைச
சர் ஜெயலலிதா முறியடித்துள்ளார்
என்றும், கடந்த தேர்தலை விட
அதிக இடங்களில் தங்கள் கட்சி
வெற்றிபெறும் என்றும் வெங்கைய
நாயுடு பதிலளித்தார். (து)

# ஊடகக் கருத்துக் கணிப்புகளை

# ஜெயலலிதா நிராகரித்தார்

(சென்னை)

வரும் மக்களவைத் தேர்தல
தொடர்பாகச் சில பத்திரிகைகளும்
சில தொலைக்காட்சிகளும் வெளி
யிட்ட கருத்துக்கணிப்புக்களைத்
தாம் பொருட்படுத்தவில்லையென்று
அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலா
ளரும் முதலமைச்சருமான ஜெய
லலிதா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில்
அவர் வெளியிட்டுள்ள ஓர் அறிக்
கையில்,தமிழகத்தைப் பொறுத்த
வரை பெரும்பாலும் இத்தகைய
கருத்துக் கணிப்புக்கள் தவறா
னவை என்று கடந்த் காலத்தில் நிரு
பிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

சமீபத்தில் ஒரு தொலைக் காட்
சியும் ஒரு பத்திரிகையும் இணைந்து
வழங்கிய கருத்துக் கணிப்பில்
தமிழ்நாட்டில் அ.இ.அ.தி.மு.க-பா.
ஜ.க. கூட்டணிக்கு மக்களவைத்
தேர்தலில் சொற்ப இடங்களே
கிடைக்குமென்று கணக்கிடப்பட்
டுள்ளது பற்றிக் குறிப்பிடும் போதே
அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமது தலைமையின் கீழ். செயற்
பட்டுவரும் அரசு, மக்களுக்குப்
பக்கபலமாக இருந்து நாட்டிலேயே
மிக்க திறமையுள்ள சமூகப் பாது
காப்பு வழங்கியுள்ளது என்றும்,
கடந்த மூன்று ஆண்டுகளாகக் கடு
மையான பருவ நிலை நிலவிய
போதும் ஏழை, எளிய மக்களுக்கு
நிவாரணம், மற்றும் உதவிகள் வழங்
கப்பட்டு உள்ளன என்றும் முத
லமைச்சர் தெரிவித்துள்ளார். (து)

# மக்கள் தீர்ப்பை ஏற்பதே ஜனநாயகத்திற்கு உரிய பண்பு

## சர்வமதத் தலைவர்கள் கருத்து

(கொழும்பு)

**வெற்றியாயினும் தோல்வியாயினும் மக்களின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வது ஜனநாயகப் பண்பாகும் என சர்வமதத் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.**

**நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத்தேர்தல் முடிவுகள் குறித்து தத்தமது கருத்துக்களை வெளியிடுகையிலேயே அவர்கள் இதனை வலியுறுத்தியுள்ளார்கள்.**

கத்தோலிக்க ஆயர்மார் சம்மேளனத்தைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய பிதா நீட் செல்டன் பெர்னாண்டோ இது தொடர்பாக விடுத்த அறிக்கை யொன்றில்,

வெற்றி தோல்வி ஆகிய இரண்டையும் அனைவரும் ஒரே மனப்பக்குவத்துடன் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

அத்துடன், இலங்கையில் உள்ள ஒவ்வொருவரும் இனி நாட்டின் எதிர்காலம் பற்றியே சிந்திக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வெற்றி எதுவாக இருந்தாலும் மக்கள் பொதுத் தேர்தல் மூலம் அளித்த தீர்ப்பை சகல அரசியல் கட்சிகளும் ஜனநாயக ரீதியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் சங்கைக்குரிய வறக்காவே தம்மா லொக்கதேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பெரும்பான்மை கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவேண்டியதன் முக்கியத்துவத்தை புத்த பெருமானும் வலியுறுத்தியுள்ளதால் இலங்கையில் உள்ள அனைத்துப் பிரஜைகளும் ஒவ்வொருவருக்கும் அன்பு காட்டி வன்முறை செயல்களில் ஈடுபடாது தவிர்க்க வேண்டும் என்றார்.

சர்வமத சமாதான மன்றத்தைச் சேர்ந்த பிரமஸ்ரீ குகானந்த சர்மா நேற்று முன்தினம் நடைபெற்ற வாக்களிப்புத் தொடர்பாக கருத்துக்கூறுகையில்,

வாக்காளர்கள் தமது கடமையை சரிவர நிறைவேற்றியிருக்கின்றார்கள். எனவே இனி மேல் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்றார்.

கொழும்பு ஜாவத்தை ஜும்மா பள்ளிவாசல் பிரதம இமாம் அப்துல்லா ஹாம் அல்காசிமி கருத்துத் தெரிவிக்கையில்,

இஸ்லாம் உள்ளிட்ட சகல மதங்களும் வன்முறைகளை வெறுகின்றதுடன், அனைவரிலும் அன்பு காட்ட வேண்டும் என்பதையே போதிக்கின்றது.

எனவே, தேர்தல் முடிவுகள் எதுவானாலும் அவற்றை சகிப்புத் தன்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எக்காரணம் கொண்டும் வன்முறைகளில் ஈடுபடக்கூடாது. நாட்டில் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ ஒத்துழைக்க வேண்டும் என்றார். (உ-60,10)

# இனவாதிகள் கைமேலோங்குமா?

# நாட்டின் மூன்றாவது பலமான கட்சியாக ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

நேற்று இடம்பெற்ற 13வது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் மூலம், இலங்கையின் பலம் வாய்ந்த மூன்றாவது கட்சி என்ற நிலையை ஜாதிகஹெல உறுமய உறுதி செய்துள்ளது.

சிஹல உறுமய என்ற பெயரில் இனவாதம் கக்குகின்ற கருத்துக்களைத் தாரகமந்திரமாகக் கொண்டியங்கி வந்த இக் கட்சியானது இம்முறை தேர்தலில் ஹெல உறுமய என்ற கட்சிப்பெயரில், பெரும்பான்மையாக பௌத்த தேரர்களை வேட்பாளர்களாக நிறுத்தி போட்டியிட்டிருந்தது.

யாழ். மாவட்டம் உள்ளிட்ட நாட்டில் பெரும்பாலான மாவட்டங்களில் போட்டியிட்ட இக்கட்சிக்கு, பௌத்த மதத்தலைவர்களை வேட்பாளர்களாக நிறுத்தியமை தொடர்பில் எதிர்ப்புக்களும் பல்வேறு அழுத்தங்களும் நிறைந்து காணப்பட்ட போதிலும், வெளியான தேர்தல் முடிவுகள் இக் கட்சிக்கு இருந்த ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

இதேவேளை, மேற்படி கட்சியானது இற்றைவரை 4வது பலமான கட்சியாக விளங்கியபோதிலும் 3வது பலமான கட்சியாக விளங்கிய ஜே.வி.பியானது ஸ்ரீ.சு.கவுடன் கூட்டமைத்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற கட்சிப்பெயரில் போட்டியிட்டதன் காரணமாக இந்த நிலையை எட்டியிருப்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. (உ)

# தபால் மூல வாக்களிப்பில் 84,624 வாக்காளர் பங்கேற்பு

(கொழும்பு)

பொதுத்தேர்தலுக்கான கடமைகளில் ஈடுபட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை உத்தியோகத்தாகள், முப்படைகளையும் சேர்ந்தவர்கள் உட்பட 2 இலட்சத்து 86 ஆயிரத்து 624 பேர்கள் 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்து தபால் மூலமான வாக்களிப்பில் கலந்து கொண்டனர்.

இந்தத் தபால் மூல்மான வாக்களிப்பு மார்ச் மாதம் 24,25 ஆம் திகதிகளில் 9.00 மணி முதல் பிற்பகல் 4.00மணிவரை அவரவர் திணைக்களங்களில் நடைபெற்றது.

22 தேர்தல் மாவட்டங்களில் 10 மாவட்டங்களில் மாத்திரம் நேற்று முன்தினம் பி.ப. 4.30 மணிமுதல் தபால் மூலமான வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பமானது. இரத்தினபுரி மாவட்டத்தின் தபால் மூலமான வாக்களிப்பின் முதல் முடிவு நேற்று முன்தினம் இரவு 10.30 மணிக்கு அறிவிக்கப்படடது. இம் மாவட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 4,886 வாக்குகளையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி 2,839 வாக்குகளையும் பெற்றிருந்தது. ஐக்கியதேசிய முன்னணியை விட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 2,047 வாக்குகளைக் கூடுதலாகப் பெற்று முன்னணியில் உள்ளது. (ம)

## ஜோசப் தோல்வி

(மட்டக்களப்பு)

நடைபெற்று முடிந்த 13வது பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் தமிழர் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டத் தலைமை வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் தோலவியடைந்தார்.

வழங்கப்பட்ட விருப்பு வாக்குகள் அடிப்படையில் ஜெயானந்தமூர்த்தி, தி.கனகசபை, தங்கேஸ்வரி, அரியநேததிரன் அல்லது கிங்ஸிலி ஆகியோரும் தெரிவு செய்யப்படும் அதிக சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. (யே)

# 13 வது பொதுத் தேர்தலின் சில காட்சிகள் – 2004














# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்

**சி.பத்மநாதன்**

பேராதனைப் பல்கலைக்கழகம்.

93

## நான்காம் அத்தியாயம்

### தாய்வழி முதுசொமான ஆதனங்களின் உரிமை வகை

4. பிற உரிமையாளர்களின் கவனமின்மையால் ஆட்சி, போகம், உடைமை, விற்பனை ஆகிய நான்கினைப் பற்றிய உரிமைகளும் ஒருவர் வசமாகுமிடத்து அந்த முதுசொமானது தேட்டமாகும்.அதன்பின் அதனைப் பற்றிய உரிமைகள் தேட்டம் பறறிய விதிகளுக்கு அமைந்தனவாகும்.
5. தாய்வழி முதுசொமானவற்றில் உடைமை உரிமையும் போக உரிமையும் கொண்ட சகோதரன் ஒருவன் தனது சகோதரிகளைத் தயவுடன் ஆதரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது ஆயினும் அவர்களுக்கு அவன் பங்கு கொடுக்க வேண்டும் என்ற சட்டம் இல்லை.
6. போக உரிமையானது தாய் மூலமாக அவளின் ஆண்மக்களை எல்லோருக்கும் சம பங்குகளிற் சேரும் என்று 36ஆம் விதியின் மூன்றாம் பிரிவிலே சொல்லப்பட்டது. மட்டக்களப்பில் மூத்தமகனே போகத்தில் முழு உரிமையும் கொண்டவனாகக் கொள்ளப்படுதல் நடைமுறை வழக்காகும். நிலம் முழுவதையும் அவன் மேற்பார்வை செய்து செய்கை பண்ணுகிறான். அவனுடைய இளைய ஆண் சகோதரர் அவற்றில் அவனுக்கு உதவி செய்வோராகவே கருதப்படுகின்றனர். ஆனாற் சட்டத்தின் படிக்கு எல்லா ஆண் சகோதரர்களும் சம பங்கு உரிமைகொண்டோர் ஆவர்.
மூத்த சகோதரன் இறக்குமிடத்து அவனுக்கு அடுத்த சகோதரன் உரிமை பெறுவான்.
7. தாய்வழி முதுசொம் ஒரு வீடாக இருப்பின் ஆட்சி உரிமைக்காரர் அதிலே குடியிருப்பதற்கும் அதனைச் சேர்ந்த வளவின் புரோசனங்களை அனுபவிப்பதற்கும் உரிமை பெறுவர்.
8. தாய்வழி முதுசொமான ஆதனங்களில் ஆட்சி உரிமை பெற்றுள்ள ஒருத்தி, தனது சீவிய காலததில் , ஆண் பிள்ளைகளுக்கு உரிய உடைமை உரிமைகளை நீக்கிவிடலாம். மேலும், அவள் தனது மகளுக்குச் சீதனமாகவோ நன்கொடையாகவோ ஆதனங்களைக் கொடுப்பதன் மூலமாகவும், அவற்றை விற்பனை செய்வதன் மூலமாகவும் தனது சீவிய காலத்திற்குப் பின்பு அவற்றின் மீது ஆண்மக்களுக்குரிய போக உரிமையை நீக்கிவிடலாம்.
9. அவற்றுக்குரிய வரிகளைச் செலுத்தாதவிடத்து அராசங்கம் தாய்வழி முதுசொமான நிலங்களை விற்றுக்கொள்ளலாம்.
10. தாய்வழி முதுசொமான அசைவுள்ளனவும் அசைவற்றனவுமாகிய சொத்துகளில் ஆட்சி உரிமை கொண்டுள்ள பெண் ஒருத்தி,தனது ஆண் சகோதரனின் உரிமைகள் பாதிப்புறா வகையில், அவற்றை விற்பனை செய்வதற்கும் நன்கொடையாகக் கொடுப்பதற்கும் உரிமை கொண்டிருப்பாள். அவளுடைய அந்த உரிமையைக் கட்டுப்படுத்துவதற்கு எந்தவொரு சட்டமில்லை.
ஆனால் இதனைப் பொறுத்துக் கருத்துவேற்றுமை உண்டு என்பது 10524,12668 என்னும் இலக்கமுடைய வழக்குத் தீர்ப்புகளாற் புலனாகின்றது. முக்குவப் பெண்கள் சீவிய உரித்துக்காரரின் சம்மத்ததுடனே தங்களுக்கு ஆட்சி உரிமையுடைய தாய்வழி முதுசொமான நிலங்களை விற்பனை செய்யும் வழக்கம் உடையவர்கள் என்பது 13341 என்னும் இலக்கமுடைய வழக்கினாலே தெளிவாகத் தெரிகின்றது. உடைமை,போகம் என்பன பற்றி உரிமை கொண்டிருந்த சகோதரன் ஒருவன் தனது சகோதரிகளின் கூட்டுன்றிச் செய்த விற்பனை செல்லுபடியாகும் என்று 12460 ஆம் இலக்க வழக்குத் தீர்ப்பிலே கூறப்பட்டுள்ளது. சகோதரிகள் அந்த விற்பனைக்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை.
11. ஒரு மகளானவள் உரிமையாகவோ நன்கொடையாகவோ சீதனமாகவோ தனது தாயிடமிருந்து பெற்ற முதுசொமான அல்லது தாய்வழி முதுசொமான நிலத்தைச், சீவிய காலத்தில் விற்காது விட்டுக் காலஞ்சென்று போனால், அந்த நிலத்தைப் பொறுத்தவரையிலே தாய்வழி முதுசொமுக்குரிய உரிமை பற்றிய விதிகள் பின்பற்றப்படும்.பெண் மக்களன்றி ஆண்மக்களே சீவிய உரித்துப் பெறுவர்.
மட்டக்களப்புப் பண்டாரப் பிள்ளைகளுக்குரிய வழமையும் இதுவே.
12. உரிமைப் பிள்ளைகள் உள்ளவரை தாய்வழி முதுசொமான சொம்களை எவரும் உரிமை இல்லாதோருக்கு எழுதிக் கொடுக்க முடியாது என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.
13. 19 வது விதிக்கமைய, தாய்வழி முதுசொமான ஆடு,மாடுகள், கருவிகள் என்பவற்றைப் பொறுத்தவரையில் அவை சேர்ந்திருக்கின்ற தாய்வழி முதுசொமான நிலம் பற்றிய விதிகள் பின்பற்றப்படும்.
14. பிறவகைக்குரிய ஆடு,மாடுகளும் கருவிகளும் அசைவுள்ள பொருட்களாகக் கொள்ளப்படும். உரிமைகளும் அத்தகைய பொருட்களுக்கு உரிய விதிகளுக்கு அமைந்தனவாய் இருக்கும்.

## ஐந்தாம் அத்தியாயம்

### கணவன், மனைவி ஆகியோரில் ஒருவர் இறந்திருக்கும் காலத்திற் பின்பற்றப்படும் விதிகள்

39. 29 ஆம் விதியிலே சொல்லப்பட்டவாறு உயிரோடு இருப்பவர் தனக்குரிய பங்கினை வைத்திருப்பர். இறந்தவரின் பங்கினை அதன் உரிமையாளர் பகுந்து கொள்வதற்கு அனுமதி அளிக்க வேண்டும்.மற்றெல்லாவிடயங்கள் குறித்தும் மூன்றாம். நான்காம் அத்தியாயங்களிலே சொல்லப்பட்ட விதிகள் சட்டமாகும்.

தாய்வழி முதுசொமான நிலங்களைத் தவிர்ந்த எல்லாச் சொத்துகளையும் விற்பதற்கும் நன்கொடை வழங்குவதற்கும் உயிருடன் இருப்பவருக்கு உரிமை உண்டு.

கணவனானவன் உடைமையும், போக உரிமையும் பெற்றுள்ள வழி முதுசொமான நிலங்களை செய்கை பண்ணுவதாலும்.வரிசெலுத்துவதாலும் ஏற்படும் கடன்களைத் தீர்ப்பதற்கன்றி, வேறெக் காரணங்கொண்டும் விற்கப்படாது.

தாய்வழி முதுசொமானவற்றில் மனைவிக்குரிய உரிமைகளைப் பொறுத்தவரையில் 38 ஆவது விதியைப் பார்க்கவும்.

(தொடரும்)

## தடையையும் மீறி ஒளிபரப்பாகும் சர்ச்சைக்குரிய தொடர் நவீனம்

(கொழும்பு)

இதுவரை காலமும் ரூபவாஹினியில் ஒளிபரப்பாகி வந்த சர்ச்சைகுரிய "அங்கிலி சலகுனா " என்னும் தொடர் நவீனம் தகுதி வாய்ந்த அதிகாரிகளால் அண்மையில் தடை செய்யப்பட்டிருந்தபோதும்,கடந்த புதனன்று இரவு தடையையும் மீறி ஐ.ரி.என். சுயாதீன தொலைக் காட்சியில் ஒளிபரபப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அத்துருகிரிய இராணுவப் பாதுகாப்பு வீடு தொடர்பான இத் தொடர், அரசியல் காரணங்களுக்காகவே ஒளிபரப்பப்பட்டது என்ற காரணத்தினால் தடை செய்யப்பட்டிருந்தது.

இது பற்றி தகுதி வாய்ந்த அதிகாரியான லக்ஷ்மன் பெரேரா தெரிவிக்கையில், ஐ. ரி. என். மேல் எந்த அதிகாரமும் எம்மால் பிரயோகிக்க முடியாது. எமக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் மற்றும் ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் மீதே அதிகாரம் பிரயோகிக்க முடியும். எவ்வாறாயினும் நிகழ்ச்சி ஒளிபரப்பப்படுவதை மக்களின் நலனுக்காக தடுத்து நிறுத்தியுள்ளோம்.

எவ்வாறு இந் நிகழ்ச்சி ஐ.ரி. என். இற்கு மாறியது என்பது பற்றி கருத்துக்கூறுவதற்கு ரூபவாஹினி கூட்டுத்தாபனத் தலைவர் ஹரிம் பீரிஸ் மறுத்து விடடார். அத்துடன் தேர்தல் ஆணையாளரின் உத்தரவை மீறி விட்ட தாக கூறி ஐ.ரி.என். தலைவர் நியூட்டன் குணரட்னாவிற்கு கரு ஜயசூரிய தனது சட்டத்தரணி கஊடாக கடிதம் ஒன்றை அனுப பியுள்ளார். (உ-6)

## தபால் மூல வாக்களிப்பில் 84,624 வாக்காளர் பங்கேற்பு

(கொழும்பு)

பொதுத்தேர்தலுக்கான கடமைகளில் ஈடுபட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை உத்தியோகத்தாகள், முப்படைகளையும் சேர்ந்தவர்கள் உட்பட 2 இலட்சத்து 86 ஆயிரத்து 624 பேர்கள் 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்து தபால் மூலமான வாக்களிப்பில் கலந்து கொண்டனர்.

இந்தத் தபால் மூலமான வாக்களிப்பு மார்ச் மாதம் 24,25 ஆம் திகதிகளில் 9.00 மணி முதல் பிற்பகல் 4.00மணிவரை அவரவர் திணைக்களங்களில் நடைபெற்றது.

22 தேர்தல் மாவட்டங்களில் 10 மாவட்டங்களில் மாத்திரம் நேற்று முன்தினம் பி.ப. 4.30 மணிமுதல் தபால் மூலமான வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பமானது. இரத்தினபுரி மாவட்டத்தின் தபால் மூலமான வாக்களிப்பின் முதல் முடிவு நேற்று முன்தினம் இரவு 10.30 மணிக்கு அறிவிக்கப்படடது. இம் மாவட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 4,886 வாக்குகளையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி 2,839 வாக்குகளையும் பெற்றிருந்தது. ஐக்கியதேசிய முன்னணியை விட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 2,047 வாக்குகளைக் கூடுதலாகப் பெற்று முன்னணியில் உள்ளது.

(ம)

## இடைநிறுத்தப்பட்ட மின் இணைப்பு வேலைகள் மீண்டும் துரித கதியில்

(கந்தர்மடம்)

மட்டுவில் தெற்கு வயிரவர் கோவிலடி சந்தியில் இருந்து பன்றித்தலைச்சி அம்மன் கோவில் வரை செல்லும் வீதியில் மின் இணைப்பு வேலைகள் மீண்டும் துரித கதியில் ஆரம்பமாகியுள்ளன.

இவ்வீதி ஓரமாக நின்ற மரங்களை மின் இணைப்பு வேலைகளுக்காக வெட்டிய போது பொது மக்களுக்கும் மின் இலாகா ஊழியர்களுக்கு மிடையே சில கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன .

இதன் காரணமாக சில தினங்கள் இந்த மின்இணைப்பு வேலைகள் இடை நிறுத்தப்பட்டிருந்தன. தொடர்ந்தும் பொது மக்களுக்கும் மின்சார இலாகா ஊழியர்களுக்குமிடையே ஓர் இணக்கப்பாடு ஏற்பட்டதன் நிமித்தம், மீண்டும் இவ வீதிக்கான மின் இணைப்பு வேலைகள் துரித கதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்னும் ஓரிரு வாரங்களில் இப்பகுதி மக்களுக்கு மின்சாரம் கிடைக்கும் என நம்பப்படுகிறது. (உ-112)

## பொலிஸ்மா அதிபருக்கு தேர்தல் ஆணையாளர் பாராட்டு

(கொழும்பு)

நேற்று முன்தினம் நடைபெற்ற 13வது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் சுமுகமான முறையில் நடை பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்த பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவைப் பாராட்டுவதுடன் ,தோதல் குறித்துத் திருப்தியடைவதாகவும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

13ஆவது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் திருப்திகரமாக நடைபெறுவதற்கு பொலிஸ்மா அதிபருடன் ஒத்துழைத்த பொலிஸாருக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும், வேட்பாளர்களுக்கும் பாராட்டும் நன்றியும் தெரிவித்துக் கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

(ம)

## தொழில்நுட்ப பூங்காவில் சான்றிதழ் பெறலாம்

(யர்ழ்ப்பாணம்)

தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் பயிற்சியினை முடித்து வெளியேறிய மாணவர்களுக்கான சான்றிதழ்களை இம்மாதம் 6ஆம் திகதியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என அதன் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

சான்றிதழ்கள் கற்கை நெறிகளை மேற்கொண்ட 5ம் ,6ம் பிரிவு மாணவர்களினதும் , மேற் கொண்ட 2ம்,3ம் பிரிவு மாண வர்களினதும் மற்றும் ஒன்லைன் கற்கை நெறிகளை மேற்கொணட 7ம்,8ம் பிரிவு மாணவர்களினதும் சான்றிதழ்களே வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, இதற்கு முன்னா நடைபெற்ற பயிற்சி நெறிக்கான சான்றிதழ்களைப் பெறாதவர்களையும் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு பணிப்பாளர்

# யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் தொகுதி ரீதியான முடிவுகள்

| | தமிழ் அரசுக்கட்சி | ஈ.பி.டி.பி | சுயேட்சை-1 | ஐ.சோ.மு. | புதிய இட.சா.மு. | சுயேட்சை-2 | ஹெல. உறுமய | றுகுணு ம.கட்சி | ஸ்ரீ.மு.க | சுயராஜ்ய கட்சி | ப.மொ.வ. | அளிக்கப்பட்ட வாக்குகள் | செ.வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பருத்தித்துறை | 22,400 | 676 | 248 | 22 | 09 | 06 | 05 | 03 | 02 | 01 | 45,457 | 24,400 | 23,372 | 1,028 |
| கோப்பாய் | 26,805 | 2108 | 453 | 32 | 36 | 16 | 12 | 09 | 18 | 09 | 61,403 | 31,940 | 29,495 | 2,445 |
| உடுப்பிட்டி | 24,172 | 874 | 362 | 25 | 23 | 15 | 12 | 05 | 13 | 06 | - | - | - | - |
| காங்கேசன்துறை | 18,499 | 2,395 | 405 | 27 | 25 | 08 | 05 | 07 | 07 | 08 | 64,434 | 23,017 | 21,386 | 1,631 |
| நல்லூர் | 22,321 | 2,431 | 800 | 32 | 30 | 14 | 05 | 07 | 14 | 05 | 67,622 | 27,124 | 25,659 | 1,465 |
| மானிப்பாய் | 23,779 | 3,239 | 980 | 36 | 54 | 22 | 20 | 06 | 11 | 11 | 65,218 | 30,420 | 28,158 | 2,268 |
| ஊர்காவற்றுறை | 13,911 | 1,406 | 51 | 11 | 11 | 08 | 04 | 05 | 41 | 03 | 51,911 | 16,736 | 18,454 | 1,282 |
| வட்டுக்கோட்டை | 24,240 | 1,513 | 485 | 42 | 32 | 15 | 09 | 06 | 09 | 07 | 61,283 | 28,901 | 26,358 | 2,543 |
| சாவகச்சேரி | 30,882 | 1,252 | 492 | 24 | 19 | 24 | 09 | 08 | 08 | 06 | 57,379 | 35,690 | 32,724 | 2,966 |
| யாழ்ப்பாணம் | 16,353 | 1,710 | 360 | 06 | 13 | 17 | 04 | 05 | 151 | 11 | 57,460 | 19,750 | 18,630 | 1,120 |
| கிளிநொச்சி | 29,574 | 145 | 171 | 18 | 06 | 06 | 08 | 04 | 05 | 02 | 57,975 | 32,152 | 29,939 | 2,213 |
| மொத்த வாக்குகள் | 2,52,936 | 17,749 | 4,807 | 275 | 258 | 151 | 93 | 65 | 279 | 69 | | | | |

## வடக்கு – கிழக்கு மாகாணங்களில் தமிழர் கூட்டமைப்புக்கு 21 ஆசனங்கள்

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்துள்ள 13வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழர் கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டியுள்ளது.

வெளியிடப்பட்ட முடிவுகளின் படி தமிழ் கூட்டமைப்பு யாழ் மாவட்டத்தில் 8 ஆசனங்களையும், வன்னி மாவட்டத்தில் 4ஆசனங்களையும், திருகோணமலையில் 2ஆசனங்களையும், மட்டக்களப்பில் 4 ஆசனங்களையும், அம்பாறையில் 1ஆசனத்தையும் கைப்பற்றி மொத்தமாக 20ஆசனங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டியுள்ளது. போனஸ் ஆசனங்களாக மேலும் இரண்டு ஆசனங்களுடன் மொத்தமாக 21ஆசனங்கள் இக்கூட்டு முன்னணிக்குக் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழர் கூட்டமைப்பில் அதிகபட்ச விருப்பு வாக்குகள் பெற்றோர் வரிசையில் யாழ். மாவட்டத்தில் செலவராஜா கஜேந்திரனும், வன்னி மாவட்டத்தில் செல்வம் அடைக்கலநாதனும், திருகோணமலையில் இரா. சம்பந்தனும், மட்டக்களப்பில் ஜெயானந்த மூர்த்தியும், அம்பாறையில் சந்திரநேருவும் அந்தந்த மாவட்டங்களில் ஆகக் கூடுதலான விருப்புவாக்குகள் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (யே)

## தேர்தல் முடிவுகள் வெளியாகும் நிலையிலும் நாட்டில் நல்ல அமைதி

(கொழும்பு)

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் தினத்தின் அதற்கடுத்த நாளான நேற்று நாடு மிகவும் அமைதியில் மூழ்கியிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் ஒப்பீட்டு ரீதியில் வெற்றிகரமாகவும் அமைதியாகவும் நடைபெற்றுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க உறுதி செய்துள்ளார்.

தேர்தல் முடிவுகள வெளி யாக ஆரம்பித்துள்ள இவ் வேளை யில், வழமை போன்று கட்சி ஆதரவாளர்கள் வன் முறைகள் எவற்றிலும் ஈடுபட வில்லை என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இது இவ்விதமிருக்க, ஹிங்கிராங்கெதத, புத்தளம், ஆனைமடு ஆகிய இடங்களில் சில வன்முறைச்சம்பவங்கள் இடம் பெற்றிருப்பதாகவும்,

மேற்படி இடங்களில் மறுவாக்குப பதிவு செய்ய வேண் டுமா என்பது பற்றிய தீர்மானம் எடுப்பதற்கான தகவல்களுக்காகத் தாம் காத்திருப்பதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (உ)

## தமிழ்க் கூட்டமைப்பின் விருப்பு வாக்குகள்

| இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|
| செல்வராஜா கஜேந்திரன் | 112,077 | 19.67% |
| பத்மினி சிதம்பரநாதன் | 68,239 | 11.98% |
| கஜேந்திரகுமார் பொன்னம்பலம் | 60,768 | 10.66% |
| கந்தையா பிரேமச்சந்திரன் | 45,783 | 8.03% |
| கிட்டினன் சிவநேசன் | 43,730 | 7.67% |
| நடராஜா இரவிராஜ் | 42,963 | 7.54% |
| கனகலிங்கம் சிவாஜிலிங்கம் | 42,191 | 7.40% |
| மாவை சேனாதிராஜா | 38,779 | 6.81% |
| கந்தர் நல்லதம்பி சிறீகாந்தா | 33,205 | 5.83% |
| சொலமன் சூ. சிறில் | 31,177 | 5.47% |
| சி. வி. கந்தையா சிவஞானம் | 25,954 | 4.55% |
| சின்னத்தம்பி சிவமகாராசா | 24,964 | 4.38% |
| | 569,830 | |

## 4 வருடங்களில் 3வது தடவையாக நடந்த நேற்றைய பொதுத் தேர்தலில் 12.8 மில்லியன் மக்கள் வாக்களிப்பு

(கொழும்பு)

நேற்று முன்தினம் நடைபெற்ற 13வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில நாடுமுழுவதும் 12.8 மில்லியன் மக்கள் வாக்களித்துள்ளனர்.

கடந்த 4வருடங்களில் இடம் பெற்ற இந்த மூன்றாவது தேர்தலுக்காக நாடளாவிய ரீதியில் 10ஆயிரத்து 439வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அமைதியான சூழலில், பலத்த [illegible]

இந்தத் தேர்தலின் நீதித் தன்மையை உறுதிப்படுத்தும் பணியில் முன்னெப்போதும இல்லாத வகையில் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் ஆயிரத்து 300பேரும், உள்நாட்டு கண்காணபபாளர்கள் 25ஆயிரத்து 500பேரும் ஈடுபட்டிருந்தனர். இதேவேளை நாடுதழுவிய ரீதியில் 70வது முதல் 80சதவீதமான வாக்காளர்கள் வாக்களிப்பில் கலந்துகொண்டதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு-72%, கம்பஹா-70%, களுத்துறை-75%, நுவரெலியா-82%, அம்பாந்தோட்டை-75%, யாழ்ப்பாணம்-50-55%, வன்னி-54%, மட்டக்களப்பு-75%, திகாமடுல்ல-75%, திருகோணமலை-72%, புத்தளம்-70%, அனுராதபுரம்-75-80%, பதுளை-75%, இரத்தினபுரி-75-80%, என்ற அடிப்படையில் வாக்களிப்பு இடம் பெற்றுள்ளது. (உ)

## சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து தமிழ்மக்கள் வாக்களித்துள்ளனர்

### நன்றி தெரிவித்து மாவை சேனாதிராஜா அறிக்கை

2004ஆம் ஆண்டு 2ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தல் தமிழ்த் தேசிய இனத்தைப் பொறுத்தவரை மிக முக்கயமானது என்பதை தமிழ்த்தேசிய இனம் ஏற்றுக்கொண்டிருக்கின்றது இவ்வாறு தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

தமிழ்த்தேச மக்கள் சுயநிர்ணய உரிமைத் தத்துவத்தின் அடிப்படையில் தங்கள் தாயகத்தில் தம் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்காக இத் தேர்தலில் வாக்களிக்குமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்திருந்தது.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தையும், அவர்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டையும் அங்கீகரித்து வாக்களிக்குமாறும் கேட்டிருந்தோம். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை இத்தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகள் நேரடியாகவே ஆதரித்து பிரசாரத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையையும், எமது வேண்டுகோளையும் ஏற்று பெருமளவில், குறிப்பாக யாழ். தேர்தல் மாவட்டத்திலும் 90 வீதமான வாக்குகள் இலங்கைத் தமிழரசுக் கட்சிச் சின்னமான வீட்டிற்குக் குவித்து மாபெரும் வெற்றி பெறவைத்துள்ளமைக்கு எம் தமிழ் மக்களுக்கு நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். இவ்வாறு அவ்வறிக்கையில் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். (த)

# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2004
# முடிவுகள் தொகுதி ரீதியாக

இதுவரை அறிவிக்கப்பட்ட தேர்தல் முடிவுகள் தொகுதி ரீதியாக வருமாறு.

### காலி மாவட்டம்

**காலி தேர்தல் தொகுதி**
- ஐ.தே.க - 23585
- ஐ.ம.சு.மு - 20779
- ஹெல உறுமய - 4166
- பு.இ.மு - 110

**ஹினிதுமை தொகுதி**
- ஐ.ம.சு.மு - 38633
- ஐ.தே.க - 27440
- ஹெல உறுமய - 1119

**பெந்தர தொகுதி**
- ஐ.ம.சு.மு - 34830
- ஐ.தே.க - 22243
- ஹெல உறுமய - 2413

**ஹபராதுவை தொகுதி**
- ஐ.ம.சு.மு - 30648
- ஐ.தே.க - 19417
- ஹெல உறுமய - 1667

### மாத்தறை மாவட்டம்

**மாத்தறைத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 32967
- ஐ.தே.க - 19458
- ஹெல உறுமய - 4309
- ஐ. சோ. க - 146

**கம்புருப்பிட்டிய தொகுதி**
- ஐ.ம.சு.மு - 31927 ஐ.தே.க - 16779
- ஹெல உறுமய - 1988

**வெலிகம தொகுதி**
- ஐ.ம.சு.மு - 34824 ஐ.தே.க - 19996
- ஹெல உறுமய - 2462

### கண்டி மாவட்டம்

**கலகெதர தொகுதி**
- ஐ.தே.க - 16645
- ஐ.ம.சு.மு - 15896
- ஹெல உறுமய - 1515
- சம்பத் பரமுன - 43

**கண்டித் தொகுதி**
- ஐ.தே.க - 14367
- ஐ.ம.சு.மு - 7141
- ஹெல உறுமய - 3959

**உடுதும்பர தொகுதி**
- ஐ.ம.சு.மு - 18319
- ஐ.தே.க - 15285
- ஹெல உறுமய - 307

**செங்கடவல தொகுதி**
- ஐ.தே.க - 22435
- ஐ.ம.சு.மு - 17433
- ஹெல உறுமய - 6191

**உடுநுவர தொகுதி**
- ஐ.தே.க - 23413
- ஐ.ம.சு.மு - 21739
- ஹெல உறுமய - 3678

### இரத்தினபுரி மாவட்டம்

**கெலியகொட தொகுதி**
- ஐ.ம.சு.மு - 31341
- ஐ.தே.க - 24934
- ஹெல உறுமய - 3142
- பு.இ.மு - 944

**கலவான தொகுதி**
- ஐ.ம.சு.மு - 22501
- ஐ.தே.க - 15726
- ஹெல உறுமய - 660

**இரத்தினபுரித் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 37386
- ஐ.தே.க - 29670
- ஹெல உறுமய - 5605

**பலாங்கொடத் தொகுதி**
- ஐ.தே.க - 32042
- ஐ.ம.சு.மு - 27685
- ஹெல உறுமய - 2364

**நிவிற்றிஹல தொகுதி**
- ஐ.ம.சு.மு - 32331
- ஐ.தே.க - 25321
- ஹெல உறுமய - 1076

### பதுளை மாவட்டம்

**பண்டாரவளைத் தொகுதி**
- ஐ.தே.க - 23791
- ஐ.ம.சு.மு - 21784
- ஹெல உறுமய - 1343

**பதுளைத் தொகுதி**
- ஐ.தே.க - 15825
- ஐ.ம.சு.மு - 15103
- ஹெல உறுமய - 1586

**அப்புத்தளைத் தொகுதி**
- ஐ.தே.க - 21258
- ஐ.ம.சு.மு - 15499
- ஹெல உறுமய - 639
- ஐ. சோ. க - 92

**வியலுவ தொகுதி**
- ஐ.ம.சு.மு - 14805
- ஐ.தே.க - 12874
- ஹெல உறுமய - 211

**வெலிமடைத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 23040
- ஐ.தே.க - 20441
- ஹெல உறுமய - 775

**ஊவாபரணகம தொகுதி**
- ஐ.ம.சு.மு - 19946
- ஐ.தே.க - 18030
- ஹெல உறுமய - 357

**பசறை தொகுதி**
- ஐ.தே.க - 21016
- ஐ.ம.சு.மு - 13779
- ஹெல உறுமய - 279

### மாத்தளை மாவட்டம்

**மாத்தளை தொகுதி**
- ஐ.தே.க - 24058
- ஐ.ம.சு.மு - 18496
- ஹெல உறுமய - 3135
- ஐ.சோ.கட்சி - 263

**தெனியாய தொகுதி**
- ஐ.ம.சு.மு - 33051
- ஐ.தே.க - 23262
- ஹெல உறுமய - 1197

**லக்வல தொகுதி**
- ஐ.ம.சு.மு - 21307
- ஐ.தே.க - 18784
- ஹெல உறுமய - 579

**இறத்தோட்டை தொகுதி**
- ஐ.ம.சு.மு - 22747
- ஐ.தே.க - 25330
- ஹெல உறுமய - 2611

**தம்புள்ள தொகுதி**
- ஐ.ம.சு.மு - 40616
- ஐ.தே.க - 29456
- ஹெல உறுமய - 1982

### பொலநறுவை மாவட்டம்

**மெதுருகிரிய தொகுதி**
- ஐ.ம.சு.மு - 26114
- ஐ.தே.க - 20522
- ஹெல உறுமய - 388
- ஐ.சோ.க - 182

**பொலநறுவைத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 45936
- ஐ.தே.க - 35420
- ஹெல உறுமய - 1067
- ஐ.சோ.க - 290

### திருகோணமலை மாவட்டம்

**திருகோணமலைத் தொகுதி**
- தமிழரசுக் கட்சி - 43809
- ஸ்ரீ.மு.கா - 13378
- ஐ.தே.க - 3193
- ஈ.பி.டி.பி - 3993
- ஹெல உறுமய - 119
- பு. இ. மு - 35

### அநுராதபுர மாவட்டம்

**ஹொரவப்பொத்தானை தொகுதி**
- ஐ.தே.க - 24924
- ஐ.ம.சு.மு - 18231
- ஹெல உறுமய - 500

**மிஹிந்தலைத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 21008
- ஐ.தே.க - 14336
- ஹெல உறுமய - 602
- ஐ.சோ.க - 132

**வடக்குத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 30591
- ஐ.தே.க - 20623
- ஹெல உறுமய - 20405

**ஹிக்கரவத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 24446
- ஐ.தே.க - 19606
- ஹெல உறுமய - 1165
- ஐ.சோ.க - 186

**அனுராதபுரம் கிழக்குத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 37380
- ஐ.தே.க - 28607
- ஹெல உறுமய - 5952

**அனுராதபுரம் மேற்குத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 28821
- ஐ.தே.க - 23876
- ஹெல உறுமய - 1260

### மட்டக்களப்பு மாவட்டம்

**பட்டிருப்புத் தொகுதி**
- தமிழரசுக் கட்சி - 57052
- ஈ.பி.டி.பி - 821
- ஸ்ரீ.மு.கா - 652
- ஐ.ம.சு.மு - 299

**கற்குடாத் தொகுதி**
- தமிழரசுக் கட்சி - 43503
- ஸ்ரீ.மு.கா - 22240

**மட்டக்களப்புத் தொகுதி**
- தமிழரசுக் கட்சி - 57144
- ஐ.ம.சு.மு - 22716
- ஸ்ரீ.மு.கா - 19612
- ஐ.தே.க - 3819
- ஈ.பி.டி.பி - 1099

### கேகாலை மாவட்டம்

**அரநாயக்கத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 16911
- ஐ.தே.க - 15321
- ஹெல உறுமய - 1458

**மாவனல்ல தொகுதி**
- ஐ.தே.க - 26099
- ஐ.ம.சு.மு - 23290
- ஹெல உறுமய - 3151

**எட்டியாந்தோட்டை தொகுதி**
- ஐ.ம.சு.மு - 22081
- ஐ.தே.க - 21500
- ஹெல உறுமய - 1083

**கலிகமுவ தொகுதி**
- ஐ.ம.சு.மு - 22980
- ஐ.தே.க - 18693
- ஹெல உறுமய - 1715

**டெடிகம தொகுதி**
- ஐ.ம.சு.மு - 28964
- ஐ.தே.க - 26328
- ஹெல உறுமய - 2095

**கேகாலைத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 23778
- ஐ.தே.க - 17509
- ஹெல உறுமய - 2834

**ருவான்வெலத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 24246
- ஐ.தே.க - 19950
- ஹெல உறுமய - 1760

### நுவரெலியா மாவட்டம்

**வலப்பனைத் தொகுதி**
- ஐ.தே.க - 22766
- ஐ.ம.சு.மு - 20607
- ஹெல உறுமய - 395

**கொத்மலைத் தொகுதி**
- ஐ.தே.க - 25390
- ஐ.ம.சு.மு - 15964
- ம.ம.மு - 4182
- ஹெல உறுமய - 593

**ஹங்குராங்கெத்த தொகுதி**
- ஐ.தே.க - 25313
- ஐ.ம.சு.மு - 16962
- ஹெல உறுமய - 630

### கம்பஹா மாவட்டம்

**மஹரகம தொகுதி**
- ஐ.ம.சு.மு - 47557
- ஐ.தே.க - 27012
- ஹெல உறுமய - 11194

**யா – எல தொகுதி**
- ஐ.ம.சு.மு - 42453
- ஐ.தே.க - 34248
- ஹெல உறுமய - 6009

**வத்தளைத் தொகுதி**
- ஐ.தே.க - 34041
- ஐ.ம.சு.மு - 28344
- ஹெல உறுமய - 4525

**தொம்பே தொகுதி**
- ஐ.ம.சு.மு - 40327
- ஐ.தே.க - 23111
- ஹெல உறுமய - 5943

**மீரிகம தொகுதி**
- ஐ.ம.சு.மு - 39853
- ஐ.தே.க - 27523
- ஹெல உறுமய - 6775

**கந்தானைத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 41823
- ஐ.தே.க - 31919
- ஹெல உறுமய - 6254
- ஜா.ச. பரமுன - 637

**நீர்கொழும்புத் தொகுதி**
- ஐ.தே.க - 33709
- ஐ.ம.சு.மு - 24357
- ஹெல உறுமய - 1759

**பியகம தொகுதி**
- ஐ.ம.சு.மு - 34502
- ஐ.தே.க - 24696
- ஹெல உறுமய - 11434
- ஜா.ச.பரமுன - 306
- ஐ.சோ.க - 197

**திவுலப்பிட்டிய தொகுதி**
- ஐ.ம.சு.மு - 34257
- ஐ.தே.க - 26267
- ஹெல உறுமய - 5666
- ஜா.ச. பரமுன - 278
- ஐ.சோ.க - 234

**மினுவாங்கொட தொகுதி**
- ஐ.ம.சு.மு - 41026
- ஐ.தே.க - 28632
- ஹெல உறுமய - 9292

**களனித் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 25774
- ஐ.தே.க - 21450
- ஹெல உறுமய - 10956

### களுத்துறை மாவட்டம்

**பேருவளைத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 33583
- ஐ.தே.க - 30210
- ஹெல உறுமய - 6751

**களுத்துறைத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 37958
- ஐ.தே.க - 26285
- ஹெல உறுமய - 8344

**பாணந்துறைத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 35687
- ஐ.தே.க - 24020
- ஹெல உறுமய - 14374
- பு.இ.மு - 113

**புளத் சிங்கள தொகுதி**
- ஐ.ம.சு.மு - 25374
- ஐ.தே.க - 22267
- ஹெல உறுமய - 2621

**ஹொரணத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 23778
- ஐ.தே.க - 17509
- ஹெல உறுமய - 2834

### கொழும்பு மாவட்டம்

**கோட்டைத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 20070
- ஐ.தே.க - 19370
- ஹெல உறுமய - 3192
- ஈ.பி.டி.பி - 15

**கொலன்னாவ தொகுதி**
- ஐ.ம.சு.மு - 32976
- ஐ.தே.க - 29540
- ஹெல உறுமய - 14311

**கொழும்பு வடக்குத் தொகுதி**
- ஐ.தே.க - 40377
- ஐ.ம.சு.மு - 12724
- ஹெல உறுமய - 3409

**கொழும்பு கிழக்குத் தொகுதி**
- ஐ.தே.க - 23739
- ஐ.ம.சு.மு - 12141
- ஹெல உறுமய - 9116

**கெஸ்பேவ தொகுதி**
- ஐ.ம.சு.மு - 45939
- ஐ.தே.க - 26302
- ஹெல உறுமய - 29805

**மகரகம தொகுதி**
- ஐ.ம.சு.மு - 37919
- ஹெல உறுமய - 25385
- ஐ.தே.க - 22337
- ஜா.ச.பரமுன - 177

**அவிசாவளைத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 37380
- ஐ.தே.க - 28607
- ஹெல உறுமய - 5952
- பு.இ.மு - 133

**இரத்மலானைத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 19284
- ஐ.தே.க - 18448
- ஹெல உறுமய - 9085

**கடுவல தொகுதி**
- ஐ.ம.சு.மு - 53065
- ஐ.தே.க - 32772
- ஹெல உறுமய - 18485

**ஹோமாகம தொகுதி**
- ஐ.ம.சு.மு - 49520
- ஐ.தே.க - 29029
- ஹெல உறுமய - 17768

**மொரட்டுவ தொகுதி**
- ஐ.ம.சு.மு - 38833
- ஐ.தே.க - 34313
- ஹெல உறுமய - 13493

### குருநாகல் மாவட்டம்

**கட்டுகம்பொல தொகுதி**
- ஐ.ம.சு.மு - 31388
- ஐ.தே.க - 24936
- ஹெல உறுமய - 3212

**தொடங்கஸ்லந்த தொகுதி**
- ஐ.ம.சு.மு - 22426
- ஐ.தே.க - 18073
- ஹெல உறுமய - 1138

**குருநாகல் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 23472
- ஐ.தே.க - 23242
- ஹெல உறுமய - 5347

**பண்டுவஸ்நுவர தொகுதி**
- ஐ.ம.சு.மு - 22142
- ஐ.தே.க - 21393
- ஹெல உறுமய - 1803

**மாவத்தகம தொகுதி**
- ஐ.ம.சு.மு - 24974
- ஐ.தே.க - 23158
- ஹெல உறுமய - 3391

**வாரியப்பொல தொகுதி**
- ஐ.ம.சு.மு - 24886
- ஐ.தே.க - 19554
- ஹெல உறுமய - 1569

**நிக்கவெரட்டிய தொகுதி**
- ஐ.ம.சு.மு - 29545
- ஐ.தே.க - 22887
- ஹெல உறுமய - 1427
- ஜா.ச.பரமுன - 88

**யாப்பஹுவ தொகுதி**
- ஐ.ம.சு.மு - 37155
- ஐ.தே.க - 28281
- ஹெல உறுமய - 1387
- ஜா.ச.பரமுன - 48

### மொனராகலை மாவட்டம்

**மொனராகலைத் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 1 17456 ஐ.தே.க - 71067
- ஹெல உறுமய - 2675

### புத்தளம் மாவட்டம்

**ஆனமடுவ தொகுதி**
- ஐ.ம.சு.மு - 33715
- ஐ.தே.க - 22547
- ஹெல உறுமய - 1231
- ஜா.ச.பரமுன - 98

**சிலாபம் தொகுதி**
- ஐ.ம.சு.மு - 31215
- ஐ.தே.க - 29934
- ஹெல உறுமய - 2352

**வென்னப்புவ தொகுதி**
- ஐ.ம.சு.மு - 29042
- ஐ.தே.க - 25378
- ஹெல உறுமய - 3208
- ஜா.ச.பரமுன - 151

**புத்தளம் தொகுதி**
- ஐ.தே.க - 34273
- ஐ.ம.சு.மு - 20069
- ஹெல உறுமய - 303

### அம்பாந்தோட்டை மாவட்டம்

(முழுமை)
- ஐ.ம.சு.மு - 1 78891
- ஐ.தே.க - 98878

# இன்று ஒரு தகவல்

## நான்கு வழிகள்

ஒரு ராஜாவுக்கு இன்னொரு ராஜாவிடம் சண்டை செய்வதற்கான சந்தர்ப்பம் வரத்தான் செய்யும். தனது நாட்டுக்கு தொந்தரவு ஏற்படும் போது தற்காப்புக்காக தேசத்தைக் காப்பாற்றுவதற்காக சண்டைபோட வேண்டிவரும்.

அடுத்த நாட்டில் அதர்மம் அதிகமாக இருந்தால் அங்கே தர்மத்தை நிலை நாட்டுவதற்காக சண்டைக்குச் செல்வபவர்களும் உண்டு. அந்தக் காலத்தில் தன்னுடைய நாடடின் எல்லையை விரிவு படுத்துவதற்காக அதாவது ராஜ்ய விஸ்தாப்புக்காகவே சண்டைக்குச் செல்பவர்களும் உண்டு. அதற்காக யுத்தம் ஆரம்பிக்கவேணடுமானால் கூட நேரடியாகப் பேரில் இறங்குவதில்லை. படிப்படியாக நான்கு வழிகளைத் தாண்ட வேண்டும். நான்காவது வழிதான் போர்.

முதல் மூன்று வழியைக் கடைப்பிடித்துப் பார்க்கவேண்டும். அவை மூன்றும் சரிவராவிட்டால்தான் நான்காவது வழியைக் கடைப்பிடிக்கவேண்டுமாம். அர்த்தசாஸ்திரமும், தர்மசாஸ்திரமும் இதை "உபாய சதுஷ்டயம்" என்று கூறுகின்றன. சாம,தான, பேத, தண்டம் என்பவை தான் இந்த நான்கு வழிகள்.

ஒரு ராஜா இன்னொருராஜா மீது படையெடுக்கவேண்டும் என்று முடிவு செய்தால் முதலில் கடைப்பிடிக்க வேண்டிய வழி ஸாமம்: முதலில் அந்த ராஜாவிடம் அன்புடன் பழகி அவனை அடங்கிவரச் செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். வேண்டியவர்களைக்கொண்டு அவனுக்கு நலல வார்த்தைகளைச் சொல்லச் செய்ய வேண்டும். மனதில் அமைதியுடன் அதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் அதுதான் ஸாமம்.

இரண்டாவது தானம்: அதாவது நாம் தான் ராஜா. இன்னொரு ராஜாவிடம் போர் செய்யப் போகின்றோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். நமக்குப் பிரியமான பொருளைக் அவனுக்கு கொடுத்து என்னுடைய ராஜ்யத்துடன் சேர்ந்து விடுகிறாயா? என்று கேட்கவேண்டும். அவன் படையெடுத்துக்கொண்டுவந்தால் இப்படி எதையாவது கொடுத்து அவனைத் திருப்பிப்போகச் செய்வது, ராஜ்யத்தில் ஒரு சிறு பகுதியை சண்டையில்லாமல கொடுத்துவிடுவது. அல்லது தனதான்யங்களைக் கொடுப்பது. இல்லாவிட்டால் ராஜா குமாரியையே எதிராளி ராஜாவுக்கோ, ராஜகுமாரனுக்கோ கல்யாணம் செய்துகொடுத்து அவனுடன் சண்டையில்லாமல் சுமுக உறவை ஏற்படுத்திக்கொள்வது இதெல்லாம் தானோபாயம்.

ஸாமம் என்பது அன்பினால் மனதை மாற்றுவது. தானம் என்பது பொருள் கொடுத்து மனதை மாற்றுவது. அதனால் இது கொஞ்சம் மட்டம் தான். மூன்றாவதாக வரும் பேதம் இருக்கின்றதே அது இதைவிட இன்னும் கொஞ்சம் மட்டம். பேதத்தை ஒரு உபாய்மாகக் கையாள்வது பேதோபாயம். இந்த உபாயத்தை வாழ்க்கை விடயங்களில் பனபற்றக கூடாது. பேதமும், தண்டமும் ராஜாங்கத்திற்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் உபாயங்கள். **Divide and Rule** என்று கூறுவார்களே. பிரித்தாளுவது அதுதான் பேதோபாயம்.

எதிரி முகாமில் பிளவை ஏற்படுத்தி அதனால் அவனுக்கு ஆதரவு குறைவது போல் செய்துவிட்டு அவனது பலத்தைக் குறைப்பது. குறைத்து விட்டு இப்போது எனக்கு அடங்குகிறாயா? என்று கேட்டு கப்பம் கட்டவைப்பது. இதிலும் கூட ஒரு தார்மீகக் கட்டுப்பாடு வைத்திருக்கின்றனர் பாருங்கள். அதாவது எதிரிக்குப் பலம் குறைந்த நிலையிலும் அவனாகப் பணிந்து வருகின்றானா என்று பார்த்துவிட்டு அதற்கும் வராவிட்டால் தான் யுத்தம்.

சாம, தான, பேத, தண்டத்தில் நான்காவதாக வரும் தண்டம் தான் யுத்தம். கொஞ்சம் யோசித்துப்பார்த்தால் இப்போதும் கூட உள்நாட்டு விவகாரங்களில் இந்த நான்கு வழிகளையும் பயன்படுத்துகின்றோம்.

மக்களுக்கு நல்ல விடயங்களை எடுத்துக்கூறுவது ஸாமம். அவர்களுக்கு சலுகைகள் காட்டுவது தானம், குற்றவாளிகளில் ஒருவனை அப்ரூவராக ஆக்கிவிட்டு குற்றத்தை நிரூபணம் செய்வது பேதம். கடைசியாகக் குற்றவாளிக்கு கொடுக்கும் தண்டனை தான் தண்டம்.

இபபடி சாம, தான, பேத ,தண்டம் என்பதற்கான சாஸ்திர விளக்கங்களைத் தந்தார் ஒரு பெரியவர். அந்தக் காலத்து ராஜாக்கள் படையெடுக்கவேண்டும் என்றால் கூட எப்படி ஒரு வழிமுறையை வகுத்திருக்கின்றனர் பாருங்கள். அதிலும் சில வித்தியாசமான ராஜாக்கள் உள்ளனர்.

ஒரு ராஜா சாவகாசமாக அரண்மனையில் உட்கார்ந்திருந்தார். படைத்தளபதி அவசரமாக ஓடி வந்தார். "அரசே பக்கத்து தேசத்து மன்னன் படையெடுத்து வந்துகொண்டிருக்கின்றான். என்ன செய்யலாம் கூறுங்கள்" என்றான். ராஜா சிறிது நிதானமாக யோசித்துப் பார்த்து விட்டு "உடனே என்னை எங்காவது பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்லுங்கள் " என்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளின் பிரதிநிதிகளை இன்று தேர்தல் ஆணையாளர் சந்திக்கிறார்

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் போட்டியிட்ட அனைத்து அரசியல் கட்சிகளினதும் செயலாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சுயேட்சைக் குழுக்களின் தலைவர் ஆகியோரை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க இன்று ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.30 மணிக்கு சந்தித்துப் பேசவுள்ளார்.

1981 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் முதலாம் இலக்கச் சட்டத்தில் 48 ஆம் 2ம் பிரிவில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மோசடிகள் இடம் பெற்றதன் காரணமாக சில வாக்களிப்பு நிலையங்களின் வாக்களிப்பை இரத்து செய்வதற்கான பிரகடனம் பற்றி ஆலோசனை மேற்கொள்வதற்காகவே தேர்தல் ஆணையாளர் அரசியல் கட்சிகளின் செயலர்கள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலர்கள் அல்லது சுயேட்சைக்குழுக்களின் தலைவர்கள் இன்றைய சந்திப்பில் கலந்துகொள்ள முடியாத பட்சத்தில் அவர்கள் தத்தமது கட்சிகளின் அல்லது சுயேட்சைக் குழுவின் பிரதிநிதிகளை அனுப்பமுடியும் எனவும் தேர்தல் ஆணையாளர் அறிவித்திருக்கின்றார்.

(உ-60,10)

# மட்டு.மாவட்டத்தில் இருந்து வடபகுதி மக்கள் வெளியேற்றம் ஐ.நா. அமைப்புக்கள் கண்டனம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அச்சுறுத்தல்களைத் தூண்டும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு பொதுமக்களுக்கு குறிப்பாக குழந்தைகளுக்கு இடம்பெயர்வின் மூலம் ஏற்படக் கூடிய துன்பங்களை தவிர்க்கும வகையல் நிதானத்துடன் நடக்கு மாறு சகல தரப்பினர்களையும் ஐ.நா அமைப்புக்கள் கேட்டுள் என.

ஐ.நா.வின்அரசசார்பற்ற அமைப்புக்களான யு.என்.டி.பி., யு.என் எச. சி.ஆர், யு.என்.எச்.சி.ஈ-எவ். மற்றும் டபிள்யு எம்பி. ஆகியவற் றின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிகள் கூட்டாக விடுத்துள்ள செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் மட்டக்களப்பில் இருந்து வட பகுதி மக்கள் வெளியேற்றப்படு வதை ஒரு துன்பச் சம்பவமாக மடடுமே பார்க்க முடியாது. இது ஓர் அப்பட்டமான மனித உரிமை மீறல் ஆகும்.

அச்சுறுத்தல்கள் அல்லது துன் பங்களுக்கு உள்ளாகக் கூடும் என்ற பீதியால் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வடபகுதி மக்கள் வெளியேறி வருகிறார் கள் என்கின்ற செய்தி எமக்கு பெரிதும் கவலையை ஏற்படுத் துவதாக உள்ளது.

மட்டக்களப்பில் உள்ள வட பகுதி வர்த தகர் களுக்கு விடுக் கப்பட்டதாகக் கூறப்படும் அச் சுறுததல்களுக்கு மார்ச்-31 ஆம் திகதி உள்ளூர் பத்திரிகையான தமிழ் அலையில் வெளியிடப் பட்ட ஒரு சிறு செய்தியும் காரணமாக அமைந்துள்ளது.

20 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வரும் உள்நாட்டுப் பிரச் சினை காரணமாக இடம்பெயர் ந்த சுமார் 3 இலட்சத்து 56 ஆயி ரம் மககள் மீண்டும் தம் சொந்த இடஙகளுக்குத் திரும்பக் கூடிய சந் தர்ப்பம் புரிந்துணர்வு உடன படிக்கையின் மூலம் உருவாகி யிருக்கும் இந்த நேரத்தில் மட் டக்களப்பு மாவட்டத்தில் இப்படி யான ஒரு நிலை ஏற்பட்டிருக் கின்றது.

இவ்வாறு மக்கள் நாம் உரிமை கள் மறுக்கப்படுவதை நாம் கடுமையாகக் கண்டிக்கின்றோம் எனவே, சகல தரப்பினரையும் பொதுமக்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் படி வலியுறுத் துகின்றோம்.

இந்த உரிமைகளை எவராது துஷ்பரயோகம்செய்தால் அதற்கு அவர்கள் பொறுப்பேறக வேண் டும் என் றுள ளது.

(உ)

## இராசி பலன்

**04. 04. 2004**

**(பங்குனி 22, ஞாயிற்றுக்கிழமை)**

| | | |
|---|---|---|
| சதுர்த்தசி | பின்னிரவு 6.38 | மணிவரை |
| இராகுகாலம் | 04.39-06.09 | மணிவரை |
| சுபநேரம் | 09.09-10.39 | மணிவரை |
| உத்தரம் | முன்னிரவு 7.59 | மணிவரை |

**மேடம்**
வியாபார நன்மை, புண்ணிய கருமம், காரிய தாமதம், நல்ல முயற்சி.

**இடபம்**
மாதாசுகம், ரோகநிலை, காரிய தாமதம், தொழில் சிந்தை.

**மிதுனம்**
புதிய முயற்சி, பிரயாண நன்மை, அந்நியர் சந்திப்பு, தன வரவு.

**கடகம்**
செல்வாக்கு, காரிய அனுகூலம், குடும்ப நலம், சிந்தனை மிகுதி.

**சிங்கம**
தெய்வ சிந்தை, உடல் நலம், நல்ல முயற்சி, போசன நன்மை.

**கன்னி**
அமைதிக் குறைவு, இடமாற்றம், காரிய தாமதம், பணவிரயம்.

**துலாம்**
பெருமையடைதல், தனலாபம், தெய்வ தரிசனம், தொழில் சிறப்பு.

**விருச்சிகம்**
நல்ல செய்தி, இஷ்ட சித்தி, அதிகாரம், குடும்ப மகிழ்ச்சி.

**தனுசு**
நல்ல காரியம், பிரயாணம், தேசாந்திர வாசம், சரீரப்பிரயாசை.

**மகரம்**
அதிர்ஷ்டக்குறைவு, ஆரோக்கியக் குறைவு, கலகம், பிரயாண பயம்.

**கும்பம**
தடைப்பட்ட காரியம் கைகூடும், விருந்துபசாரம், தேகநலன், பண வருவாய்.

**மீனம்**
மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம், தேகாரோக்கியம், பகைவர் நேசம்.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

**- வளவன்.**

# பவ்ரல் அமைப்பினுடைய செய்தியாளர் மாநாடு இன்று

(கொழும்பு)

பவ்ரல் அமைப்பின் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று இன்று பி.ப.2.30 மணிக்கு அதன் தலைமையகமான மார்க்கா இன்ஸ்ரிற்ரியூற்றிலுள்ள மார்க்கா ஓடிற்றோரியத்தில் நடைபெறும் என்று பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸிலி ரொட்றிக்கோ அறிவித்துள்ளார்.

13வது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் தொடர்பான ஆரம்ப அறிக்கையை அவ் அமைப்பு தேர்தல் தினத்தன்று வெளியிட்டுவிட்டது.

இன்றைய செய்தியாளர் மாநாட்டில் வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்களின் அறிக்கையும் வடக்கு -கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற தேர்தலில் பரிபூரண அறிக்கையும் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

(யே)

## ஊர்வலங்கள் நடத்தத்தடை

(கொழும்பு)

இம் மாதம் 9ஆம் திகதி வரை கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றை நடத்தக்கூடாது என பிரதிப்பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்தின பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

அவ்வாறு இத்தகைய கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு முயற்சிப்போர்களுக்கும் அதில் பங்கு பற்றுவோர்களுக்கும் எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளார்.

இதேவேளை, 1965ஆம் ஆண்டின் பின்னர் தேர்தல் முடிவடைந்ததும் ,ஊரடங்குச்சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்படாத் தேர்தல் ஆண்டு இது என்பதையும் பொலிஸ்மா அதிபர் சுட்டிக்காட்டினார்.

(உ_60,10)

# பல நலங்களும் பெற அருளும் பங்குனி உத்தர நன்நாள்

**இன்றைய பங்குனி உத்தரநாளைச் சிறப்பிக்கும் வகையில் இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது**

ஒவ்வொரு மாத பௌர்ணமியும் ஒவ்வொரு விரத நன் நாட்களாக இந்துக்கள் கொள்வது மரபு. அந்த விதத்தில் பங்குனி பௌர்ணமியோடு உத்தர நட்சத்திரம் சேரும் சுப வேளையில் அனுஷ்டிக்கப்படுவதே பங்குனி உத்தர விரதம் ஆகும். இதை "கல்யாண விரதம்" என்றும் கூறுவது மரபு. ஏனெனின் சீதா தேவிக்கும் ஸ்ரீராமனுக்கும் திருமணம் நடந்த சுப நன்நாளும் மதுரையம்பதியில் அங்கயற்கண்ணி மீனாட்சிக்கும் சொக்கனாதப் பெருமானுக்கும் திருமணம் நடந்த நாளும் திருப்பரங்குன்றத்தில் தேவயானை அமபாளுக்கும வேலவனுக்கும் திருக்கல்யாணம் நடைபெற்ற நாளும் பங்குனி உத்தரமே ஆகும்.

## முருகப் பெருமானுக்குப் பிரியமான நன்நாள்

வசநதகாலம் பங்குனிமாத இறுதியிலேயே ஆரம்பமாகின்றது. எனவே ஆலய உற்சவங்கள் இம் மாதம் தொட்டு புரட்டாதி மாதம் வரை அதிகளவில் நடைபெறுவது வழமை.

பஙகுனி மாதத்து நன் நாளில் பல தலங்களில் திருக்கல்யாணத் திருவிழா நடைபெறுவது வழமை. முருகப் பெருமானுக்கும் சிவபெருமானுக்கும் மிக பிரியமான நன்நாள் பங்குனி மாத உத்தர நன்நாள். அதன் காரணமாக இலங்கையிற் கூட கொழும்பு பொன்னம்பல வாணேஸ்வரர் கோயில், ஈழத்துச் சிதம்பரம் ஆகிய தலங்களில் பஞ்சரத பவனி, மகாதீர்த்தம் ஆகியன நிகழ்கின்றன.

தென்னாட்டின் மிகவும் சிறப்புடைய திருவாவினன்குடி என்று சொல்லப்படுகின்ற "பழனி" என்னும் முருகத் தலத்திற்கு ஆயிரக் கணக்கான பக்தப் பெருமக்கள பத்து வித விதமான காவடிகளைச் சுமந்து சென்று பங்குனி உத்தர நாளில் மங்களகரமான பாலாபிஷேகம் செய்து வலலவனான பழனிப் பரமன் பால முருகனடி பரவி மறு நாள் இடும்பன் எனும் முருக பக்தனுக்கும் வழிபாடு ஆற்றி மிக்க மகிழ்வடைவார்கள். ஆறுபடை வீடுகளில் முதற் படை வீடும் தேவையானையைக் கந்தன் மனந்த தலமும் நக்கீரரால் பாடப்பெற்றதுமான திருப்பரங்குன்றத்திலும் பங்குனி உத்தரப் பெருவிழா நடைபெறுகின்றது.

இவ்வளவு மட்டுமல்ல இன்னும் தலங்களில் பங்குனி மாதத்திற் பெருவிழா நடைபெறுகின்றது திருவாவூர் தேர்த் திருவிழா பங்குனி உத்தரத்தில் நடைபெறுகின்றது: சுந்தர மூர்த்தி நாயனார் இவ் விழாவினை திருவாவூர் பெருமான் திருத்தலத்தில் செவ்வனே நிறைவேற்ற இறைவனிடம் பொன் பெறறு பதிகம் பாடியதாக பெரிய புராணம் செப்புகின்றது. இடும்பன் என்னும் முருக பக்தன அகஸ்திய மாமுனிவரின் ஆணை ஏற்று இமைய மலையில் இருந்து பழனி மலை யைக் கொணர்ந்து தென்னாட்டிற் ஸ்தாபித்த நன்நாள் பங்குனி உத்தரமாகும்.

புரட்டாதியும் பங்குனியும் இயமனது கோரப் பற்கள் என வர்ணிக்கப்படுகின்றது. ஏனெனில் குளிரும் வெப்பமும் கலக் கிறது. ஆதலில் இக்காலத்தில் நவராத்திரி முதலிய புண்ணி நாட்களை அமைத்து இறைவனை வழிபட்டார்கள். பழனியில் பாலாபிஷேகம், திருவாவூரில் தேரோட்டம் இவற்றினை பங்குனி உத்தரத்தில் வைத்தமை உத்தர மகிமையை செப்பும்.

## பங்குனி உத்தரத்தின் மகிமை

புராணங்கள், இதிகாசங்கள் பஙகுனி உத்தர மகிமையை வெளிப்படுத்துகின்றன. பங்குனி உத்தர விரதத்தை நாற்பத்தெட்டு வருடம் தவறாது நோற்றோர் முக்தி பெறுவது நிச்சயம் என்று பெரியவர்கள் உறுதி கூறுகின்றனர். தென்னிந்திய கிராமங்களில் வேல் ஆயுதத்தை ஊர்வலமாக முருகன் நாமம் சொல்ல ஆற்றங்கரைக்கு கொண்டு சென்று விழா செய்து மகிழ்வதை மக்கள் வழக்கமாகக் கொண்டுள்ளார்கள்.

முருகப் பெருமான் திருநடன கோலத்திலே காட்சி தரும் தில்லையில் உள்ள பாண்டி நாயகம் என்ற திருத்தல மஹோற்சவம் பங்குனி மாதத்திலேயே நடைபெற்று வருகின்றது. சிதம்பரத்தை வாழவிற்காண முடியாதவர்களுக்கு மிக சுலபமாக காடசி தந்து முக்தி தரும் ஈழத்துச் சிதம்பரத்தில் பங்குனி உத்தர பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கதாகும். இந் நன்நாளில் நாம் எல்லாம் இறைவனை வழி பட்டு நற்பேறுபெறுவோமாக. ★

---

# சிங்கள மக்கள் மாறிவிட்டனரா?

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் அணி. -குறள்

வலம்புரி

13 ஆவது பாராளுமன்றத்தின் தேர்தல் முடிவுகள் இன்னமும் முழுமையாக வெளிவராத போதிலும் உத்தியோகபூர்மற்ற தேர்தல் முடிவுகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கான வெற்றியை கோடிகாட்டியுள்ளது.

இத்தகைய வெற்றி சிங்கள தேசத்தில் அதிர்ச்சயை ஏற்படுத்தாது இருந்தாலும், வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கு அப்பாற் பட்டதோர் முடிவாகவே இது கருதப்படு கின்றது.

அதாவது, ஐக்கிய தேசியக் கட்சியே இம்முறை தேர்தலிலும் பெரும்பான்மை பலத்தை பெற்றுக் கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டது. தமிழ் மக்களின் இத்தகைய எதிர்பார்ப்புக்கு நியாயமான காரணங்களும் இருக்கவே செய்தது.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கியதேசிய முன்னணி ஆட்சியமைத்த கையோடு பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா விடுதலைப் புலிகளோர்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டு யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்தினார். அத்தோடு விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தையையும் நடத்தினார். இதன் காரணமாக யுத்த அழிவுகள், உயிர்ச் சேதங்கள் என்பன தடுக்கப்பட்டது.

இவ்வாறு யுத்த நிறுத்தம் கடந்த இரண்டு வருடங்களாக நீடித்ததன் காரணமாக மனித உயிரழிவுகள் தவிர்க்கப்பட்டன. இந்நிலையில் சிங்கள மக்கள் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியையே இத்தேர்தலிலும் ஆதரிப்பார்களென எதிர்பார்க்கப் பட்டது.

ஆனால், எதிர்பார்ப்புக்கு மாறாக சிறி லங்கா சுதந்திரக் கட்சி- ஜே.வி.பி ஆகியவற்றின் கூட்டமைப்பான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணக்கே பெரும்பான்மை பலம் கிடைத்துள்ளது.

மக்களின் எதிர்பார்ப்புகள்- அரசியல் ஆய்வாளர்களின் எதிர்வு கூறல்கள், கருத்துக்கணிப்புகள் எல்லாவற்றையும் தாண்டி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெறுவதற்கும், அதற்கு மக்கள் வாக்களிப்பதற்குமான காரணங்கள் கண்டறியப்பட வேண்டும். அவ்வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான அரசாங்கம் கடந்த இரண்டுவருட ஆட்சிக் காலத்தில் விட்ட தவறுகளே அக்கட்சியின் பின்னடைவுக்குக் காரணமெனக் கண்டறியப் படலாம்.

குறிப்பாக,

★ இரண்டு வருடம் கடந்த போதிலும சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் ஒர் நிரந்தரத் தீர்வை எட்டாமை,

★வேலைவாய்ப்புக்கள் எதனையும் வழங்காமை,

★போர்ச் செலவு மீதம், வெளிநாடுகளின் உதவி என்ற வகையில் நாட்டில் நிதிப் புழக்கம் இருந்த போதிலும் அபிவிருத்தித் திட்டங்கள், வறுமை ஒழிப்புகள், நிவாரண அதிகரிப்புகள் எதுவுமே நடைபெறாமல் போனமை,

இவை காரணமாகவே ரணில் விக்கிரமசிங்காவின் கட்சி தோல்வியை தழுவியது. இத்தகைய தோல்வி இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்டுகின்றது. அதில் ஒன்று ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தைக் கலைத்ததை நியாயப்படுத்துகின்றது. மற்றையது பாராளுமன்றக் கலைப்பு, தேர்தலுக்கான அறிவிப்பு, ஜே.வீ.பி உடனான கூட்டு இந்த மூன்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு சாதகமாக அமைந்துள்ளது.

இந்த முடிவுகளோடு எம்மை ஆற்றுப்படுத்திக் கொள்ளாமல் ஒருபடி அப்பாற் சென்று சிங்கள வாக்காளர்களின் மன நிலை பற்றி சிந்திப்போமாயின், அவர்கள் சமாதானத்தின் மீது கொண்ட பற்றுறுதியை தற்போது தளர்த்தி விட்டனர் என்ற முடிவுக்கு வரவேண்டியதாக உள்ளது.

இதனை ஜே.வி.பி யுடன் கூட்டுச் சேர்ந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி பெற்ற வெற்றியும், சமாதானத்திற்கு முற்றுமுழுதாக எதிர்ப்புத் தெரிவித்த ஜாதிக ஹெல உறுமயக் கட்சி எடுத்த எடுப்பிலேயே பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக்கொண்டதும் உறுதி செய்துள்ளது.

---

## இடைநிறுத்தப்பட்டிருந்த ஏ-9 பாதையூடான போக்குவரத்து, மீண்டும் வழமைக்குத் திரும்பியது

(யாழ்ப்பாணம்)

இடைநிறுத்தப்படடிருந்த ஏ-9 பாதையூடான பேரக் குவரத்து நேற்றுக்காலை முதல் மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தலையொட்டி விடுதலைப் புலிகளின கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் வாக்களிப்பதற்கு வசதியாக ஒமந்தை மற்றும் முகமாலைப் பகுதிகளில் வாக்குச் சாவடிகள் அமைக்கப் பட்டிருந்தன.

இந்த வாக்களிப்புக்கு வசதியாக தேர்தல் தினமான நேற்று முன் தினமும் அதற்கு முன் தினமும் ஏ-9 நெடுஞ்சாலை மக்கள் போக்குவரத்திற்காகத் திறந்து விடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

---

## திணசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

இததனை காலமாக நாம் பிறரைச் சார்ந்தே இருந்துள்ளோம் ஒருவரால் நமக்குச் சற்று இன் பம கிடைத்துள்ளது அந்த ஆள் போய்விட்டாலோ என் இன்பமும் அவனுடன் போய் வடுகிறது. மனிதனின் அசட்டுத்தனத்தைப் பாருங்கள் இன்பத்திற்காக அவன் மனிதர்களை சார்கிறான் பிரிவு, துன்பம் தரக் கூடியதுதான். இன்பத்திற்காகப் பணத்தை நம்ப முடியுமா? பணம் கைமாறிச் செல்வது அல்லவா? மாறாத ஆன்மாவை விட்டு விட்டு உடல் நலத்தையோ வேறு எதையோ சார்வது. இன்றோ நாளையோ துன்பத்தைக் கொண்டுவந்தே தீரும்.

**சுவாமி விவேகானந்தர்**

---

## நான்கு மாவட்டங்களில் மீள் வாக்குப்பதிவு நடைபெறும்

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த 13வது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் முடிவுகள் தொடர்பில் 4 மாவட்டங்களில் மீள்வாக்குப்பதிவு இடம்பெறும் என்று தெரியவருகிறது.

இதன்படி கண்டி,நுவரெலியா,குருநாகல்,திகாமடுல்ல ஆகிய நான்கு மாவட்டங்களின் குறிப்பிட்ட சில தொகுதிகளில் எதிர்வரும் 6ஆம் திகதி மீள்வாக்குப்பதிவு இடம்பெறும் என்று தெரியவருகிறது. இது தொடர்பான உத்தியோகபூர்வ முடிவுகளை இன்று மு.ப. 10.30 மணிக்கு கட்சித்தலைவர்களுடன் நடைபெறும் கலந்துரையாடல்களை அடுத்துத் தேர்தல்கள் ஆணையாளர் வெளியிடுவார் என்றும் தெரியவருகிறது. (யே)

## மீன் சேகரிக்கும் நிலையங்கள்

(யாழ்ப்பாணம்)

உலக உணவு விவசாய நிறுவனத்தின் நிதியுதவியுடன் மூன்று கடற்றொழில் சமாசங்களுக்கு குளிரூட்டப்பட்ட மின் சேகரிக்கும் நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்,வேலணை,வடமராட்சி வடக்கு ஆகிய பிரதேசங்களில் உள்ள மூன்று கடற்றொழில் சமாசங்களுக்கு கடல் உணவுகளைச் சந்தைப்படுத்துவதற்காகவே இந்த நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. (உ)

## விருப்பு வாக்குகள் இன்று வெளியாகும்

(கொழும்பு)

தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை இன்று உத்தியோக பூர்வமாக வெளியிடப்படும் என தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

நேற்று மாலை முதல் விருப்பு வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பமாகிய போதும்,இன்றே உத்தியோக பூர்வமாக அதன் எண்ணிக்கையை வெளியிட முடியும் என்றும் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது. (உ-61,10)

---

## தவக்காலச் சிந்தனை~39

இயேசுவின் பாடுகளில் விஞ்சி நிற்கும் பண்பு அவர் தம்மையே மனமுவந்து கையளித்தது தான் அவரை கொலை செய்வதற்கு திட்டங்கள் தீட்டப் பட்டிருப்பினும், அதற்கு அஞ்சி ஒழிந்து கொள்ள வில்லை. மாறாக, தனது வாழ்வின் நோக்கம் நிறைவு பெறுவதற்காக தன்னையே வழங்க முன் வருகின்றார்.தனது உயிர் தான் அவர் வாழ்ந்து காட்டிய மறையாட்சியின் விலையென்றால் அதையும் தருவதற்கு தயாராக வாழ்ந்தார். அவரது உயிரை யாரும் பறித்துக் கொள்ள முடிய வில்லை. மாறாக அவர் தன் உயிரைக் கொடுத்தார். (யோவா 10:18) இலட்சியவாதிகளைக் கொல்ல முடியாது.ஏனெனில் அவர்கள் அஞ்சா நெஞ்சுடன் அவர்களது இலட்சியத் திற்காக போராடிக் கொண்டே இருப்பார்கள். ஒரு நாள் அவர்கள் கொல்லப்படுவர் என்பதும் அவர்களுக்குத் தெரியும். அதை அறிந்தும் தாங்கள் தொடங்கிய பயணத்தில் உயிரையும் பணயம் வைத்து தொடர்வார்கள்.இயேசுவின் பாடுகளை தியானிக்கும் இந்த புனித வாரத்தில் எப்படிப் பட்ட மனநிலையோடு அவரது சிலு வைப் பயணத்தை பார்க் கின்றோம் என்று சிந்திப்பது நல்லது. நமது மீட்பர் அவரது இலட்சியப் பயணத்தில் சத்தித்த வேதனைகளை வீரத்துடன் எதிர் கொள்வதற்கு அடித்தளமாக இருந்தது அவரது சொத்த இறையாட்சிக் கனவே நமது அர்ப்பண உணர்வு வேகம் பெறட்டும்.

**காவலன்**

# தேர்தல் முடிவுகள் அறிவிப்பது நேற்று மாலையுடன் நிறுத்தம்

## 10 மாவட்ட முடிவுகள் மட்டும் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

**நடந்து முடிந்த 13வது பாராளுமன்ற பொதுத் தேர்தலின் பத்து மாவட்டங்களின் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் ஏனைய மாவட்டங்களின் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுவதை நேற்று மாலை 6.30மணியுடன் இடைநிறுத்திக்கொள்வதாகவும், இது தொடர்பாக இன்று காலை தேர்தலில் போட்டியிட்ட கட்சிச் செயலாளர்களுடன் நடத்தப்படும் கலந்துரையாடலை அடுத்து ஏனைய 12 மாவட்டங்களின் முடிவுகளும், இறுதி முடிவுகளும் இன்று அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா அறிவித்துள்ளார்.**

நடந்து முடிந்த 13வது பாராளுமன்ற பொதுத் தேர்தலின் பத்து மாவட்டத்தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் திடிரென் நேற்று மாலை 6.30 மணியுடன் முடிவுகள் அறிவிப்பதை நிறுத்திய தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா நேற்று மாலை நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் பத்திரிகையாளர் மத்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

13வது பாராளுமன்ற பொதுத் தேர்தல் முடிவடைந்து 24 மணித்தியாலங்கள் சென்ற நிலையில் தேர்தல் முடிவுகளை முழுமையாக அறிவிக்கமுடியாதுள்ளது. சில மாவட்டங்களில் ஏற்பட்ட தேர்தல் அசம்பாவிதங்கள் தொடர்பாக கிடைக்கப்பட்ட அறிக்கைகளை முழுமையாக ஆராய்ந்து தீர்மானம் எடுக்க வேண்டியிருப்பதனாலேயே முடிவுகள் அறிவிப்பதை நிறுத்த வேண்டியுள்ளது.

22 மாவட்டங்களில் இருந்தும் 200 வரை அறிக்கைகள் கிடைக்க வேண்டிய நிலையில் எமக்கு இதுவரை 170வரையிலான அறிக்கைகளே கிடைக்கப்பெற்றுள்ளது. இந்நிலையிலேயே இது தொடர்பாக கட்சித்தலைவர்கள், செயலாளர்களுடன் இன்று காலை 10.30 மணிக்கு கலந்துரையாடவுள்ளேன். இவர்களுடனான சந்திப்பையடுத்தே எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைய இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும்.

இறுதித் தீர்மானத்தை இன்று காலை உறுதியாக எடுக்கக்கூடியதாக இருப்பதால் அதுவரை நீங்கள் பொறுமையைக்கடைப்பிடிக்க வேண்டும் என்றார்.

இது இவ்வாறிருக்க 22 மாவட்டங்களிலும் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் பெற்ற விருப்புவாக்குகள் எண்ணும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டுள்ளது. இதன் விபரம் இன்று வெளியிடப்படும்.

கண்டி, திகாமடுல்ல மாவட்டங்களின் வாக்குப்பெட்டிகள் தொடர்பாக இதுவரை அது சம்பந்தமான அறிக்கை கிடைக்கவில்லை. தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்திற்கு இதுவே பிரதானமான காரணமாகும். என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

(ம)

### கொழும்பு...

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட மகேஸ்வரன் விருப்பு வாக்கில் முதல் 5 இடங்களுக்குள் இடம்பெற்றுள்ளதாக பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

20 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் கொழும்பு மாவட்டத் தேர்தலில் மகேஸ்வரன் பெருமளவான தமிழ் வாக்காளர்களின் ஆதரவைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொதுத் தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன்னர் மகேஸ்வரன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியிருந்தமை தெரிந்ததே. (த)

### ஐக்கிய தேசிய...

தமிழர் கூட்டமைப்புடன் சேர்ந்து ஆட்சியமைப்பது தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்துவதற்காக இக்குழுவினர் வன்னிக்கு இன்று வரவுள்ளதாகவும் அவ்வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்படுகிறது.

டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன தலைமையிலான இக் குழுவினர் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களையும், தமிழர் கூட்டமைப்பின் தலைவர்களையும் சந்திக்கவுள்ளதாகவும், இவர்கள் ஓரிரு நாட்கள் வன்னியில் தங்கியிருப்பர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி.வண. இராயப்பு ஜோசப் ஆண்டகையையும் இக்குழுவினர் சந்திப்பர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (யே)

### தமிழ்த்தேசியக்...

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் உள்ள பதினொரு தேர்தல் தொகுதிகள் ரீதியாகவும் நோக்கு மிடத்து, பல ஆயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் தமிழரசுக் கட்சி முன்ணணியில் திகழ்கின்றது. அடுத்த நிலையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உள்ளதுடன், மூன்றாம் நிலையில் வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேச்சைக்குழு - I இடம்பெற்றுள்ளது.

இந்த வகையில் கிளிநொச்சி தேர்தல் தொகுதி அடங்கலாக யாழ். மாவட்டத்தில் பதியப்பட்ட வாக்குகள் 6இலட்சத்து 44ஆயிரத்து 729 ஆகும். இதில் அளிக்கப்பட்ட வாக்குகளில் தமிழரசுக் கட்சி 2இலட்சத்து 57ஆயிரத்து 320 வாக்குக்களை அதாவது மொத்த வாக்குக்களில் 90.6 வீதத்தைப் பெற்றுள்ளது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 18 ஆயிரத்து 612 வாக்குக்களை அதாவது 6.5 வீதமான வாக்குக்களையும் சுயேச்சைக் குழு - I 5ஆயிரத்து 156 வாக்குக்களை அதாவது 1.82 வீதமான வாக்குகளையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆயிரத்து 900 வாக்குகளை அதாவது 0.7வீதமான வாக்குகளையும் பெற்றுள்ளன.

இதேவேள்ள், யாழ்.மாவட்டத்தில் 21ஆயிரத்து 233 வாக்குக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. 2இலட்சத்து 84ஆயிரத்து 26 வாக்குக்கள் செல்லுபடியானவையாக கணிக்கப்பட்டுள்ளன.

இது இவ்விதமிருக்க, கடந்த 2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 06ஆசனங்களையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 02 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 01ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ- 4, 19)

### வன்னியில்...

இதில் முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தரான நூர்தீன் மசூரும் வெற்றி பெற்றுள்ளார். தமிழர் கூட்டமைப்பின் 5 முக்கியஸ்தர்கள் பெற்றுள்ள விருப்புவாக்குகள் வருமாறு:

செல்வம்அடைக்கலநாதன் 35,274
சிவசக்தி ஆனந்தன் 27,862
நோகராகலிங்கம் வினோ 25,696
கனகரட்ணம் 24,822
சிவநாதன் கிஷோர் 14,525

ஆகியோர் அதிகபடியான விருப்பு வாக்குகளைப்பெற்றனர். (யே)

### ஐ.ம.சு...

82 ஆசனங்களும் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

225 ஆசனங்களைக் கொண்ட இலங்கை பாராளுமன்றத்தில் 113 ஆசனங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு இன்னமும் 5 ஆசனங்களே தேவையாக இருக்கும்.

இதனை ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் ஆதரவுடன் நிரப்பலாமென கொழும்பு அரசியல் தரப்பில் பேசப்படுகின்ற அதே வேளை, இதற்கான முயற்சியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, 82 ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைப்பதாயின் 31 ஆசனங்கள் தேவைப்படுமெனவும்; இதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு கிடைத்தால் 21 இடங்களை ஐக்கிய தேசியக் கட்சி ஈட்டிக்கொள்ளுமாயினும், ஏனைய 9 இடங்களை நிரப்புவதற்கு ஜாதிக ஹெல உறுமயவின் உதவியைப் பெறவேண்டுமென்வும் கருத்துக்கூறிய அரசியல் அவதானிகள், ஐக்கியதேசியக் கட்சிக்கு ஜாதிக ஹெல உறுமய ஆதரவு வழங்காதெனவும் குறிப்பிட்டுள்ளனர். இதன் காரணமாக ஐக்கியதேசியக் கட்சி ஆட்சியமைக்கும் வாய்ப்பு இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஆட்சியமைக்கும் நடவடிக்கையில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும், அவ்வாறு ஆட்சியமைக்கும் பட்சத்தில் ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் பிரதமராகப் பதவியேற்பார் எனவும் கொழும்பில் பரவலாகப் பேசப்படுகின்றது. (ம)

## ஐ.ம.சு.மு. ஆதரவாளர்கள் வெடி கொளுத்தி ஆரவாரம்

(கொழும்பு)

நேற்று முன்தினம் நாடு முழுவதும் நடைபெற்ற இலங்கையின் 13ஆவது நாடாளுமன்றத்திற்கான தேர்தல் முடிவுகள் நேற்று அதிகாலைமுதல் வெளியாகத் தொடங்கின.

இதன் பிரகாரம் பொதுஜன ஐக்கிய முன்னணி-ஜே.வி.பி. கூட்டணி-ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அதிகளவிலான தொகுதிகளில் முன்னணியில் உள்ளமையை அடுத்து அந்தக் கட்சியின் ஆதரவாளர்கள் வெடிகொளுத்தி ஆரவாரங்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

தென்பகுதியின் பல வீதிகளிலும் இறங்கி இனிப்புக்களைப் பரிமாறியும், வெடிகளைக் கொளுத்தியும் ஆரவாரம் புரிந்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்கள் விகாரைகளில் விசேட வழிபாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், தமது பாரம்பரிய மரபுக்கமைந்த நடனம் முதலியவற்றையும் ஆடி மகிழ்வை வெளிப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

| மாவட்டம் | ஐ.ம.சு.கூ | ஐ.தே.க | த.தே.கூ | ஜா.ஹெ.உ | சி.மு.கா | ஈ.பி.டி.பி |
|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 08 | 09 | - | 03 | - | - |
| கம்பஹா | 09 | 06 | | 02 | - | - |
| களுத்துறை | 06 | 03 | - | 01 | - | - |
| கண்டி | 05 | 06 | - | 01 | - | - |
| மாத்தளை | 03 | 02 | | - | - | - |
| நுவரெலியா | 02 | 05 | - | | - | - |
| காலி | 06 | 04 | - | - | | - |
| மாத்தறை | 05 | 03 | | | - | - |
| அம்பாந்தோட்டை | 05 | 02 | | | | - |
| யாழ்ப்பாணம் | - | - | 08 | - | - | 01 |
| வன்னி | 01 | 01 | 04 | - | - | |
| மட்டக்களப்பு | - | - | 04 | - | 01 | - |
| திகாமடுல்ல | 04 | - | 01 | - | 02 | - |
| திருகோணமலை | 01 | - | 02 | - | 01 | - |
| குருணாகல | 09 | 07 | | - | | |
| புத்தளம் | 05 | 03 | - | | - | - |
| அநுராதபுரம் | 05 | 03 | - | | - | |
| பொலநறுவை | 03 | 02 | - | - | - | - |
| பதுளை | 03 | 05 | - | - | - | - |
| மொனராகலை | 03 | 02 | - | - | - | - |
| இரத்தினபுரி | 06 | 04 | - | - | - | - |
| கேகாலை | 05 | 04 | - | - | - | - |
| தேசியப்பட்டியல் | 14 | 11 | 02 | 02 | - | - |
| மொத்தம் | 108 | 82 | 21 | 09 | 04 | 01 |

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.04.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.